FRIENDS MISSIONARY PRAYER BAND
YOUTH & TEENS WING

# கேரீத்

A monthly Prayer Bulletin for Youth & Teens
Vol 13 - Transmit 01 - January 2020

# படைப்பின் நாயகர்!



படைப்பின் நாயகரின் கரத்தில் நீ இருந்தால்
படைப்பின் நோக்கத்தோடு சிறப்பாய் நீ வாழ்வாய்!
பயப்படாத வாழ்வினை பாரினில் நீ வாழ்வாய்!
பாதையெல்லாம் அவர் உன் வெளிச்சமாய் இருப்பார்.
பயணங்கள் சிறந்திடும் நீ போகுமிடம் சேர்த்திடும் அவரது வலதுகரம்!

## சிருஷ்டிப்பின் காலம்

12 STAGES OF BIBLE
CREATION STAGE 1



Private circulation only

# CREATION
## HISTORY / OUR STORY

# சிருஷ்டிப்பின் காலம் அறிமுகம் ஆதி : 1-11

பரிசுத்த வேதாமத்தை 12 பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு மாதமும் இன்னும் ஆழமாக பரிசுத்த வேதாமகத்தை கற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.அந்த வரிசையில் முதலாவதாக இந்த மாதம் கற்றுக்கொள்ள போவது சிருஷ்டிப்பின் காலம். இது ஆதியாகமம் முதல் அதிகாரம் தொடங்கி 11 அதிகாரங்கள் உள்ளடக்கியுள்ளது.பரிசுத்த வேதாகமத்தில் உள்ள முதல் 11 அத்தியாயங்கள்,மீதமுள்ள மற்ற 1178 அத்தியாயங்களை எளிதில் புரிந்துக்கொள்ள மிக மிக முக்கியமானதாகும்.ஒருவர் இதை ஏற்றுக்கொண்டால் மீதமுள்ள பழைய மற்றும் புதிய ஏற்பாட்டை அப்படியே ஏற்றுக்கொள்ளவும் எளிதில் புரிந்துக்கொள்ளவும் முடியும்.பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு பிரிவிலும் முக்கியமான நபர்களும், துணை கதாபாத்திரங்களும் ஒரு பெண் கதாபாத்திரமும், ஒரு தீர்க்கதரிசியும் முக்கியமான நிகழ்வுகளும், நாம் நினைவில் வைத்துக்கொள்ள உதவும். இந்த 11 அதிகாரங்களில் முக்கியமான ஆண் கதாபாத்திரமாக ஆதாம், பெண் கதாப்பாத்திரம் ஏவாள் மற்றும் துணை கதாபாத்திரங்களாக காயீன், ஆபேல், நோவா,சேத் என்பவர்களும், தீர்க்கதரிசியாக ஏனோக்குவும், கீழ்காணும் படத்தில் காணலாம்.

இந்த பகுதியில் 4 முக்கிய நிகழ்வுகளான படைப்பு, வீழ்ச்சி, வெள்ளம் மற்றும் பாபேல் கோபுரமும் ஆகும். உலகின் படைப்பைப் பற்றி சொன்னால் இதில் எலக்ட்ரான் முதல் கேலக்ஸி வரையும்,டைனோசர் முதல் சிறிய வகை பூக்கள் வரையும், ஆதாமிலிருந்து தேவதூதர்கள் வரை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரு பகுதியில் மாத்திரமே தேவன் ஓய்வு எடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 2:2,3) இப்பகுதியில்தான் முதல் மனிதன் படைக்கப்பட்டதையும் (ஆதாம்)அவன் மூலமாய் உருவான புதிய மனிதன் (காயீன்) ஆதியாகமம் 1:26, 4:1 இதைப்பற்றியும் வாசிக்கிறோம். மனிதனின் முதல் இறப்பு இங்குதான் பதிவு செய்யப்பட்டுள்ளது(ஆபேல்). முதல் மனிதன் மரணத்தை காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்டதும் ஆதி 4:8,5:24லும் வாசிக்கிறோம். பாம்பு, காகம் மற்றும் புறா போன்ற ஜீவராசிகளின் அறிமுகம் இந்த பகுதியில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.




தேவன் படைப்பில் அவர் மகிமையையும்(ஆதி 1:1), அவருடைய இரட்சிப்பில் அவருடைய கிருபை (ஆதி 6:8) ஆகிய இவை இரண்டும் தெள்ளத்தெளிவாய் உணர்த்தப்படுகிறது. உலகின் மிகப்பழமையான நாகரீகத்தின் தோற்றமும் (காயினியர்கள் - ஆதி 4:17) இங்கேயே துவங்கியது. மிக அதிகமாக ஆண்டுகள் வாழ்ந்த மனிதனைக் குறித்தும் (மெத்துசாலா 969 ஆண்டுகள் ஆதி 5:27) இப்பகுதியிலேயே காணமுடியும். இந்த பிரிவில் தான் முதல் திருமணமும், முதல் கொலையும் நடக்கிறது. ஆனால் மேசியாவின் வாக்குதத்தமும் (ஆதி 2:23-25, 4:8, 3:15) கொடுக்கபட்டுள்ளது. மனிதனின் முதல் தெய்வத்தோடு கொண்ட உறவும், தெய்வத்தினால் உண்டான மீட்பும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. பாவிகள் மூழ்கடிக்கப்படுகிறதும், பரிசுத்தவான்கள் குடித்து வெறிப்பதும் ஆதி 7:21, 9:20,21 ஆகிய பகுதியில் வாசிக்கலாம்.

ஒரு கப்பல் மலையின் மீது தங்குவதும், ஒரு கோபுரம் கட்டி எழுப்பப்படுகிறதும் ஆதி 8:4, 11:14ல் வாசிக்கலாம்.இந்த முக்கியமான நிகழ்வுகளையும், முக்கியமான நபர்களையும் மனதில் வைத்துக்கொண்டு இப்பகுதிகளையும், இம்மாத கேரீத்தையும் வாசித்துப் பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.

## முக்கிய நிகழ்வுகள்







12 STAGES OF BIBLE
CREATION STAGE 1

**கிறிஸ்துவின் பிரிய அன்பர்களுக்கு, படைப்பின் நாயகராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மகிழ்ச்சி மிகு இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**




இந்த புதிய ஆண்டிலும் அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்வோராய் வாழ்ந்திட தீர்மானம் எடுப்போம். கிரமமான ஜெபத்திற்கும், வேத ஆராய்ச்சிக்கும் நம்மை ஒப்புக்கொடுப்போம்.படைப்பின் நாயகராம் இயேசுவிடம் நம்முடைய வாழ்வின் நோக்கம் கேட்டறிவோம். அதன்பின்பு நம் வாழ்வை செலுத்துவோம் வேதத்தில் வேரூன்றுவோம். அதுவே நம்வாழ்வின் நோக்கத்தை அறிந்திடும் பாதை காட்டும் கருவி. சத்திய வேதத்தை சரியாய் கற்போம் சரித்திரம் புரிந்த சாதனையாளர்கள் பட்டியலிலும் இடம் பெறுவோம். வேதத்தின் வழி நடக்க, வேதத்தை விரும்பிப் படிக்க ஜனவரி முதல் டிசம்பர் வரை பரிசுத்த வேதாகமத்தை 12 பிரிவுகளாக பிரித்து, முழு வேதாகமத்தையும் கற்றுக் கொள்ள இருக்கிறோம். இதனால் முழு வேதாகமத்தையும் அது எழுதப்பட்ட உட்கருத்தை இன்னும் ஆழமாய் கற்றுக்கொள்ளவும், தனி தியானத்திலும், குழு தியானத்திலும் வேத ஆராய்ச்சி செய்யும் விதத்திலும் உருவாக்குகிறோம். ஜெபத்துடன் வாசிப்போம். நண்பர்களுக்கும் அறிமுகம் செய்வோம். இந்த ஆண்டு முழுவதுமே வேதத்தின் வெளிச்சத்தில் நடந்திட, படைப்பின் நாயகர் உதவிட ஜெபத்துடன் வாசிப்போம். பரிசுத்த வேதாகமம் என்னும் கண்ணாடியை அனுதினமும் பார்த்து நம்மை சரி செய்வோம். தெளித்தேன், பாலாகிய உணவை உட்கொள்ளுவோம். பட்டயமாக அறுத்தெரிய வேண்டிய காரியங்களை அறுத்தெறிவோம். நம்மை உடைத்து உருவாக்கும் சம்மட்டியாகிய வேதத்தை கிரமமாய் பயன்படுத்துவோம். விலையேறப்பெற்ற பொன்னாகிய வேதத்தில் முக்கியத்துவம் கொடுப்போம். விலையேறப்பெற்றோராய் நம் வாழ்வை மாற்றும் அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வெற்றி வீரர்களாய், சரித்திர புருஷர்களாய் வாழ்ந்திட வாழ்த்துகிறோம். என் பகுதியில் உள்ள வாலிபர்களை எல்லாம் அழைத்து ஒரு நாள் கூடுகை நடத்துவேன் என்று தீர்மானியுங்கள்...

என் பகுதியில் மற்றுமோர் இளைஞர் ஜெபக்குழுவை ஆரம்பிப்பேன் என்று...தீர்மானியுங்கள்,தேசத்தின தலைவர்களுக்காக பொறுப்போடு ஜெபிப்பேன் என்று தீர்மானம் எடுங்கள் திக்கற்வர்கள், வயோதிபர், ஆறுதலற்றிருப்போருக்கு என்னுடைய நேரம், அன்பு போன்றவற்றைத் தருவேன் என்று தீர்மானியுங்கள்...தேவன் தாமே ஒவ்வொருவருக்கும் உதவுவாராக.

kerithmagazine@gmail.com
9841973060 , 9445001563

இயேசு கிறிஸ்துவின் பணியில்
ப.செல்வின்

## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும்
வாலிபர் மற்றும் இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்

## தரிசனம்

இந்தியாவின் எதிர்கால தூண்களாகிய
இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை
விதைத்திடவும், சிந்தனைக் கூர் கொண்டு
இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையில்
இளைஞர்களுக்கான ஓர் இறை படைப்பு.

## நோக்கம்

வாலிபர் – இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களை வலுப்படுத்தும் மாத இதழ்

## தயாரிப்பு & வடிவமைப்பு

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவு

FMPB Youth wing
9, Rhenius Street
Palayamkottai
Tirunelveli - 627002
Cell : 9003251982

FMPB Youth wing,
90/86 Basanthi Devi Aparts,
Kothaval Chavadi St
Saidapet, Chennai -15
Cell : 9841032224

www.fmpbyouth.org
Kerithmagazine@gmail.com

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

Youth & Teens Wing
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn.277

சந்தா மற்றும் முகவரி
மாற்றத்திற்குக் கூப்பிடுங்க

Cell : 9445001563
9445052797

## ஜெபக்குழுத் தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள்
தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும்
கேரீத் இதழின் செய்திகளும்
ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப்
பிரித்து நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம்.
ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றைத்
தனியாக எடுத்து ஜெபநேரத்தில்
பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய
பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவிற்கு வரும்
வாலிபர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம்.
ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை
மாதம் ஒருமுறை சந்திப்போம்.
பயன்படுத்துங்கள், ஜெபக்குழுவை
வலுப்படுத்துங்கள்...

## தொடர் ஜெபத்திற்கு

**அறைகூவல்**
மாத இதழ் பயன்படுத்தவும்




# யோலோ YOLO

- Mr.Selwyn

Yolo வா அப்படினா என்ன? இது என்ன மொழி கிரேக்க அல்லது லத்தீனா என்று குழம்பவே வேண்டாங்க. Yolo என்றால் ஆங்கில வார்த்தை You only live once என்பதின் சுருக்கமே. நாம் வாழும் இந்த வாழ்க்கை ஒரே ஒருமுறை மட்டுமே. அதை எப்படி வாழ்ந்து முடிக்க வேண்டும் என வேதம் தெளிவாக கூறுகிறது. ஆதாம் முதல், இன்று வாழ்கிற நம்முடைய ஒவ்வொருவக்கும் ஒரே ஒரு வாழ்க்கை மட்டுமே. இந்த வாழ்வின் துவக்கம் பிறந்த நாள் நமக்கு தெரியும். ஆனால் இவ்வாழ்க்கையின் முடிவு (இறக்கும் நாள்) நமக்கு தெரியாது.அதுமட்டும் நமக்கு தெரிந்தால் அவ்வளவுதான்.நமது வாழ்வே நரகமாகிவிடும்.அப்படி இறக்கும் நாள் குறிக்கப்பட்ட மனிதர்களிடம் கேட்டுப்பார்த்தால் அவர்கள் ஒவ்வொரு மணித்துளிகளையும் மிகவும் கருத்தாய் செலவிடுவார்கள். நமது வாழ்வில் ஒரு சில காரியங்கள் நமக்கு தெரியாமல் இருப்பது தான் நல்லது.நம் வாழ்நாளில் எவ்வளவு வாழ்ந்தோம் என்பது அல்ல எப்படி வாழ்ந்தோம்? எதற்காக வாழ்ந்தோம் என்பதே முக்கியம்.நாம் வாழும் வாழ்க்கை ஒருமுறை வாழ்ந்திடும் தலைமுறை என்பது போல நாம் வாழும் போது மட்டுமல்ல நாம் மரித்தாலும் பேசப்படும் வாழ்க்கை வாழ்ந்து முடிக்கவே அழைக்கப்படுகிறோம்.அப்படியென்றால் ஆதாம் முதல் நமது வாழ்வு வரை அதிகமான ஆண்டுகள் வாழ்ந்தது யார் என்று கேட்டால் அதற்கும் நமது பரிசுத்த வேதாகமம் மட்டுமே பதில் கொடுக்க முடியும்.அவர் “மெத்துசலா”அவருடைய வாழ்வின் நாட்கள் 969 ஆண்டுகள் என ஆதி 5:27ல் வாசிக்கிறோம்.பின்பு எப்படி நமது வாழ்நாட்கள் குறுகி போனது என்பதற்கும் நமது பரிசுத்த வேதாகமமே விரிவாக விளக்குகிறது. ஆதியாகமம் 5ம் மற்றும் 6ம் அதிகாரத்தில் ஆதாம் முதல் அநேகர் அதிகமான ஆண்டுகள் வாழ்ந்தது பதிவு செய்ய படுகிறது. ஆதி 5ம் அதிகாரம்.

| பெயர் | ஆதாம் | சேத் | ஏனோஸ் | மகலாலெயேல் | கேனோஸ் | யாரேது | ஏனோக்கு | மெத்தூசலா | லாமேக்கு | நோவா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வசனம் | (Gen 5:5) | (Vs 8) | (Vs 11) | (Vs 5) | (Vs 14) | (Vs 20) | (Vs 23) | (Vs 27) | (Vs 31) | (Gen 9.29) |
| ஆண்டுகள் | 930 | 912 | 905 | 895 | 910 | 962 | 365 | 969 | 787 | 950 |

இவர்களில் அதிகமாக வாழ்ந்தது மெத்தூசலா மட்டுமே 969 ஆண்டுகள். பின் ஏன் நமது வாழ்க்கை குறுகிப்போனது. இதற்கு காரணமே கீழ்ப்படியாமையினால் வந்த பாவமேதான். மெத்தூசலா - 969 வருடம் , ஆதி 6:3 -ல் 120 வருடம், சங்கீதம் 90:10 ல் 70வருடம் அல்லது 80வருடம் இப்படியாக குறைந்து போன வாழ்வை வேதம் இன்றும் கூறும் போது அது மாயை, புகை, புல் என வாசிக்கிறோம்.

| நிழல் | புகை | மாயை | புல் | நாலு விரல்கிடையில் | கூடாரக்காடரன் நாட்கள் | அஞ்சற்காரர் ஓட்டம் |
|---|---|---|---|---|---|---|
| சங் 102:11 | சங் 103: 3 | யோபு 7:16 | சங் 103:15 | சங் 39:5 | யோபு 7:1 | யோபு 9: 25 |

நாம் வாழும் இந்த வாழ்க்கை நிழல் போல, மாயையாக, புகை போல, புல்லாய் மறைந்து போகும் கூடாரக்காரர்கள் போல நாடோடிகளில் அதுமட்டுமல்லாமல் நமது ஓட்டம் அஞ்சற்காரர் ஓட்டம் போல மற்றவர்களிடம் கொடுத்துவிட்டு வெறுமையாக ஓடும் ஓட்டம் என்றும் நமது வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்த வாழ்க்கை என்ற ஓட்டத்தை சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் மற்றவர்களுக்கு பிரயோஜனமான ஓட்டமாக ஓடிமுடிப்போம்.மறைந்து போகும் இவ்வாழ்வை மறவாமல் மனதில் வைத்திடும் வாழ்வாக வாழ்ந்து காட்டுவோம். நமக்கு கொடுத்திருக்கும் இந்த ஈவான வாழ்வு நிரந்தரமற்றது. ஆனால் நாம் நிரந்தரமான பரம வாழ்வுக்கு அழைக்கப்பெற்றவர்கள். நாம் வாழும் இந்த குறுகிய வாழ்நாட்களில் நமது ஆயுசுநாட்களை கூட்டவும், நீடித்து வாழவும் வேதத்தில் சில விதித் திட்டங்களை வைத்திருக்கிறார்கள். வாழ்நாள் நீடித் திருக்க கடைபிடிக்க வேண்டியவை 1. தாயும் தகப்பனை கனம்பண்ணு. (யாத் 20:12), 2. கற்பனை, கட்டளை கைக்கொள் (உபா 6:1, 5:16,) 3. அவருடைய நாமத்தில் நிலைத்திருக்கும்போது. (நீதி 9:11) (அவராலே) நாம் நன்றாய் இருப்பதற்கும், நமது ஆயுசு நாட்கள் நீடித்திருப்பதற்கும் நம் தாயையும், தகப்பனையும் கனம்பண்ண வேண்டும். அவருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம்.அவருக்கு பயப்படுகிறதினால் வரும் ஞானத்தில் நிறைந்திருக்கும் போதும் நமது ஆயுசு நாட்கள் நீடித்திருக்க முடியும். ஆகவே நமக்கு கொடுக்கப்பட்ட இந்த வாழ்வில் நாட்களை எண்ணும் அறிவை தாரும் என்று ஜெபத்தோடு செயல்படுவோம் (சங் 90:12). நமது ஒவ்வொரு நாட்களையும் கருத்தாய் விஷேசமாக கருதி வீணாக்காமல் வாழ அழைக்கப்படுகிறோம் (ரோமர் 14:6). மேலும் ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காண வேண்டும் என்பவர்கள் செய்ய வேண்டிய பட்டியலை 1 பேதுரு 3:8-11 வரை உள்ள வசனங்கள் குறிப்பிடுகின்றன. அவைகளை கடைபிடித்து உத்தமமாய் வாழ்வோம். உத்தமமாய் வாழ்வோரின் நாட்களை அவர் அறிந்திருக்கிறார் (சங் 37:18) நமது காலங்கள் அவர் கரத்தில் உள்ளது.அவரே நமது ஆயுசு நாட்களை பூரணபடுத்தவும் (யாத் 23:25) வாலிப நாட்களை குறுகிப்போக பண்ணுகிறவரும் அவரே (சங் 89:45) இராஜாக்களின் நாட்களை கூட்டிப்போடவும், குறைத்து போடுபவரும் அவரே (சங் 61:6)



நாம் வாழும் நாட்கள் பொல்லாதவைகள் ஆகையால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்(எபே 5:16) ஒரே ஒரு வாழ்க்கை அதுவும் சீக்கிரம் கடந்திடும்.ஆனால் நாம் கிறிஸ்துவுக்காக செய்வது மட்டுமே என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.இவ்வுலகிற்கு நாம் ஒன்றும் கொண்டு வந்ததும் இல்லை.கொண்டு போவதும் இல்லை. ஆனால் கிறிஸ்துவுக்காய் செய்யும் காரியமும் நாம் இவ்வாழ்நாட்களில் செய்யும் ஆத்தும ஆதாயமே இம்மையிலும், மறுமையிலும் நிலைத்திருக்கும். இந்த புதிய ஆண்டில் கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்ய தீர்மானித்து இந்த புதிய ஆண்டை துவக்குவோம்.ஒவ்வொரு நாளும் அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்வோராய் வாழ்வோம்.வெந்ததை தின்று வெறுமனே வாழ்ந்து விதி வந்தால் சாவோம் என்ற கூட்டத்தோடு அல்ல. கிறிஸ்துவுக்காக ஏதாவது எஞ்சிய நாட்களில் செய்து மடிவோம். ஒரு வாழ்க்கை அது கிறிஸ்துவுக்காக என்று ஒவ்வொரு மனுஷனையும் ஆண்டவர் பயன்படுத்துகிறார்.பயனுள்ள பாத்திரமாய் அநேகருக்கு பயன்படும் பாத்திரமாய் வாழ்ந்திட நம்மை அற்பணிப்பே-ாம் கர்த்தர் தாமே புதிய ஆண்டில் அவருக்காவே வாழ்ந்து சுகித்திட உதவுவாராக ஆமேன்.

### இவ்வளவு தானா மனித வாழ்வு?

மனிதன் மரணமடைந்த
36 மணி நேரத்தில்
அவனது உடலில் ஈக்கள்
முட்டையிடுகின்றன.
60மணி நேரத்தில்
லார்வாக்கள் தோன்றுகின்றன.
3 நாட்களில் நகங்கள் கழன்று
விடுகின்றன.
4 நாட்களில் ஈறுகள்
தொலைகின்றன.
5 நாட்களில் மூளை திரவமாய்
உருகுகிறது.
6 நாட்களில் வாயுக்களால்
வயிறு வெடிக்கிறது.
2மாதங்களில் உடல் உருகி
திரவமாகின்றது.
60 நாட்களில் அடையாளம்
தெரியாமல் போகின்றது.
“மனிதனுடைய நாட்கள்
புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது;
வெளியின் புஷ்பத்தைப் போல்
பூக்கிறான். காற்று
அதின் மேல் வீசினவுடனே
அது இல்லாமல் போயிற்று.
அது இருந்த இடமும் இனி
அதை அறியாது”
(சங்கீதம் 103:15,16) இந்த
உலகத்தில் வாழ்கிற நாட்களில்
ஆண்டவருக்காக நாம்
செய்வது மட்டுமே நிலைத்து
நிற்கும்.

ONLY ONE LIFE - Bro.Selwyn
'twill soon be past, only what's done for christ will last



# COVENANT
# உடன்படிக்கை

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் முதல் ஞாயிறு ஆராதனை உடன்படிக்கையின் ஆராதனையாக சபைகளில் அனுசரிக்கப்பட்டு வருகிறது என்பது நாம் யாவரும் அறிந்ததே. திருச்சபையைப் புதுபிக்கும் வகையில் ஆராதனை ஒழுங்கில் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். எபிரெய மொழியில் Berith = ஏற்பாடு, இணக்கம், உடன்பாடு செய்தல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. உடன்படிக்கை என்றால் ஒன்று. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் சந்தித்துப் பேசி முடிவெடுத்துக் கொள்ளுதல் என்பதாகும். இனி உடன்படிக்கையைக் குறித்து விளக்கமாகக் காண்போம்.

### 1. உடன்படிக்கையின் வகைகள்:

இரு சாரர் பேசி முடிவெடுப்பது. இருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் முதலாவது மேலாதிக்க உடன்படிக்கை ஆகும். ஆதி 17:1-8ல் கடவுள் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொண்டார். பழைய ஏற்பாட்டில் கடவுள் உலக சம்பந்த மான உடன்படிக்கையை ஏதேனில் ஆதாமுடன் தொடங்கி நோவா, ஆபிரகாம், மோசே, இஸ்ரவேல், யாக்கோபு, தாவீது போன்றவர்களோடு உடன்படிக்கைச் செய்து கொண்டார்.

இரண்டாவது சமநிலை உடன்படிக்கை ஆகும். ஆணும், பெண்ணும் திருமணத்தில் கொடுத்துக்கொள்ளும் வாக்குகள், வியாபாரம், நண்பர் இருவர் என்று சமமானவர்கள் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளை சமநிலை உடன்படிக்கை செய்து கொண்டவர்களில் யோனத்தான். தாவீது (1 சாமு 18:3-7) ஆபிரகாம் அபிமலேக்கு (ஆதி 21:29) மற்றும் யாக்கோபு லாபான் (ஆதி 31:44-46) ஆகியோர் அடங்குவர்.

மூன்றாவது கீழானோர் உடன்படிக்கை ஆகும். இது எஜமானனும், வேலைக்காரனும் செய்து கொள்ளும் உடன்படிக்கையைக் குறிக்கும். திருமறை உடன்படிக்கையில் கடவுள் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையினால் தேசத்தையும், தாவீதோடு செய்த உடன்படிக்கையினால் முடியாட்சியையும், லேவியரோடு செய்த உடன்படிக்கையினால் ஆசாரியத்துவத்தையும் ஏற்படுத்தினார். கடவுள் உடன்படிக்கையின் கடவுள். இஸ்ரவேலும் புதிய இஸ்ரவேலாகிய திருச்சபையும் உடன்படிக்கையின் மக்கள். கடவுள் இஸ்ரவேலராகிய நான் உன் தேவன். நீ என் ஜனம் என்றார். இப்படி உடன்படிக்கைகளைப் பல வகையாய்க் காண்கிறோம்.

### உடன்படிக்கையின் அம்சங்கள்:

அம்சங்களில் அடங்குவன நிபந்தனை, விளைவுகள், பாதுகாப்பு என்பனவாகும். உன் தேவனாகிய கடவுள் நானே. உன்னை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு புறப்படப்பண்ணினேன். உன் வாழ்வும், சந்ததியும் நிலைக்க நான் உனக்கு கொடுக்கும் கற்பனைகளின்படி நீ நடந்தால் ஆசீர்வாதம் உண்டு. கற்பனையை மீறி நடந்தால் சாபம் ஏற்படும் என கடவுள் கூறுகிறார். பத்து கற்பனைகளை உண்டுபண்ணி சாட்சியின் பெட்டியில் வைத்து கையாளும்படி தேவன் கட்டளையிட்டார்.கடவுள் தாமே சாட்சி யாகவும், துணை சாட்சியாக (யோசு 24:22) இரத்தம் தெளித்து (யாத் 29:8) விருந்து கொடுத்து நியமித்தார். இதனால் உடன்படிக்கையின் ஆசீர்வாதமும் சாபமும் எழுதப்பட்டதை உபாகமம் 26,27 அதிகாரங்களில் விரிவாய் காண கிறோம். திருமறை புத்தகத்தை இரு பகுதியாகப் பிரித்து பழைய உடன்பாடு, புதிய உடன்பாடு என வகைப்படுத்தினர். அதை ஏற்பாடுகள் எனச் சொல்லி வருகிறோம். உடன்படிக்கையின் அம்சங்கள் நமக்கு விடுதலையா? கற்பனைகளா? வேதபுத்தகமா? என்ற கேள்வி முன்வைக்கப்படுகிறது.

### உடன்படிக்கையின் வாழ்வு:

கிறிஸ்து இயேசுவினால் பாவத்தினின்று மீட்கப்பட்டு அவர் மூலமாய் கடவுளுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டு அவருக்குள் வாழ்வு நடத்த நாம் அழைக்கப்பட்டிருக்கிறோமென உடன்படிக்கை ஆராதனைகளில் புதுப்பித்துக்கொள்கின்றோம். நாம் உடன்படிக்கையின் பங்காளிகள். உடன்படிக்கையின் நிபந்தனைகள் வெறும் சடங்காச்சார நிபந்தனைகளாக இல்லாமல் சன்மார்க்க நிபந்தனைகளாக கடவுளின் கற்பனைகளை உண்மையாக வாழ்வில் கடைப்பிடிக்கிற நிபந்தனைகளாக ஏற்கவே அழைக்கப்படுகிறோம். கீழ்ப்படியாமையினால் உடன்படிக்கை அழிக்கப்பட்டது. இதனால் பலகைகளிலல்ல. இருதயத்தில் எழுதப்படவேண்டிய உடன்படிக்கையைப் புதிய உடன்படிக்கை என்கிறோம். அது புதுப்பிக்கப்படுகிறது என எரேமியா தீர்க்கன் முன் உரைத்தான் (எரே 31:33). எனவே இந்த உடன்படிக்கையில் நாம் புதுப்பிக்கப்படுகிறோம்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் கீழ்படியாமையால் ஏற்பட்ட இடைவெளியைப் போக்க மீண்டும் இயேசுவானவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் ஆட்டுக்குட்டி யாகப் பலி செலுத்தப்படப் போகிறதை எண்ணி இறுதி யாக ஒரே பலியானார். பெரிய வியாழன் இரவு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று பஸ்கா போஜனத்தை ஆசீர்வதித்து அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி இது என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை யாய் இருக்கிறது என்றார். இப்படி இருதய சம்பந்த மான, உடன்படிக்கையை, பாவங்களை நீக்கும் உடன்படிக்கையைக் குறித்து பேசும்போது, இவ்வுலகில் வாழும் நாட்களில் கிறிஸ்துவுக்காக சிலுவையை சுமப்பேன் என்றார். நாம் புதுப்பித்துக் கொள்ளும் உடன்படிக்கையை அனுதினமும் வாழ்ந்து காட்டுவோம். மற்றும் பிறரை வாழ வைப்போம்.

தினம் ஒரு கோழிக் குஞ்சுசைத் திருடிவந்த நண்பனை இடித்துரைத்தான் ஒருவன். அதற்கு அவன் இனி நான் திருடுவதை குறைத்துக்கொள்கிறேன் என்ற உடன்படிக்கைக்கு வந்தான். இன்றுமுதல் மாதம் ஒன்றாகத் திருடுவேன். அடுத்த ஆண்டிலிருந்து அறவே விட்டுவிடுவேன் என்றான். இதுவல்ல உடன்பாட்டிற்கு வருவது. இன்று அவருடைய சத்ததைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களை கடினப்படுத்தாதிருங்கள் என்று வசனம் எச்சரிக்கிறது. அவரது வாக்கின்படி நடந்து கொள்வதே உடன்படிக்கை மக்களாக வாழ்வதாகும். இதை நம் வாழ்வில் நிறைவேற்றுவோம் ஆமென்.

- KTM



# சிருஷ்டிப்பின் ஆரம்பம்

**1ST WEEK MESSAGE**

(ஆதியாகமம் 1-2)

கிறிஸ்தவர்கள், முகமதியர் யூதர்கள் ஆகிய மக்கள் இனம் இந்த உலகத்தில் 54 சதவிகிதம் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் உலகம் பூமி உயிர்வாழும் ஜீவன்கள் மேலும் மனிதர்கள் முதற்கொண்டு அனைத்தும் உருவாக்கினவர் சிருஷ்டி கர்த்தராகிய தேவன் என்று விசுவாசிக்கிறார்கள். சரியான தீர்மானத்திற்குள் நம்மை வழி நடத்தும் படியாக, எண்ணற்ற காரியங்களை உருவாக்கிப்படைத்த சிருஷ்டிகரை வேதாகமத்தின் மூலம் நமக்கு வெளிப்படுத்துகிறார். வேறு எந்தப் புத்தகமும் இதைச்சொல்லவில்லை. எங்கும் ஜீவிக்கிற தேவனிடத்திலிருந்து இந்த வெளிப்பாடு நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த முக்கியமான வினாக்களுக்கு வேதாகமம் விடையளிக்கிறது.

1. நான் எங்கிருந்து வந்தேன்? (ஆதி ஆரம்பத்தைக் குறித்தது)
2. நான் யார்? தெளிவு படுத்திக் கொள்வதற்கானது)
3. ஏன் இந்த உலகம் இப்படி குழம்பிக்கிடக்கிறது? (பாவத்தைக் குறித்த கேள்வி)
4. எதிர்காலம் என்று ஒன்று உண்டா? (செயல் நோக்கத்திற்கான கேள்வி)

வேத ஆதாரங்களை நாம் நன்கு தெரிந்து கொண்டு இப்பொழுது இருக்கிறவர்களுக்கு வெளிப்படுத்தும்படி, தேவன் நமது வார்த்தையினால் ஒவ்வொன்றையும் உருவாக்கி இது நல்லது என்று கண்டார் என்பதும் ஆதி பிதாவாகிய தேவன் ஒப்பற்ற, தன்னலமற்ற, தனக்கானவைகளையெல்லாம் அதனதன் தன்மைகளுக்கு ஏற்றவாறு ஒவ்வொன்றையும் சிருஷ்டித்தார் என்பதும் ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அனைத்து அறிவியல்களும் சிருஷ்டிப்பின் அறிவியல்கள். மனிதன் தன்சுய அறிவினால் தெரிந்து புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்குத் தக்கதாக தேவனின் சிருஷ்டிப்புகள் அமைந்துள்ளது. இந்த உலகம் தற்செயலாக உருவாக்கப்பட்டிருந்தால், தேவ கட்டளைக்கு கீழ்ப்படியும் என்று எதிர்பார்க்க முடியாது. மேலும் இது எப்படி நடக்கும், செயல்படும் என்று மனித அறிவினால் கணக்கிடப்படவும் முடியாது. அதுவுமல்லாமல் இடம், நேரம் இவைகளின் மீதான விதிமுறைகளுக்கு ஒத்துப்போகக் கூடிய காரணங்களை எதிர்பார்க்க முடியுமா?

**மனிதனைக்குறித்து:**

தேவன் மனிதனை தன் சாயலாகவும், தன்னைப் போலும் படைத்தார். தேவ சாயலில் உண்டாக்கப்பட்டோம் என்பதே மனிதனின் சிறப்பு ஆகும். வெள்ளத்திற்குப் பிற்பாடு வந்த நோவா மற்றும் அவன் சந்ததியில் உருவானதே இந்த சமுதாயம். எனவே வேதாகமத்தின்படி அனைத்து மனித சமுதாயத்திற்கும் ஆரம்பம் ஒன்று உண்டு என்பது தெளிவாகிறது. மனிதன் தேவ சிருஷ்டிப்பின் மகுடம் மற்றும் தேவனின் பிள்ளை என்ற தகுதியைப் பெற்றவன். மேலும் தேவனோடு நேரடி தொடர்புடையவன்.




1. உருவாக்கப்பட்டது.
2. பொதுவான ஆரம்பம்
3. பல பகுதிகளைக் கொண்ட உயிரினம்
4. தேவனின் மரபு (குழந்தைகள்)
5. தேவ செயலில் உருவானது
6. கட்டளைக்குக் கீழாக

**இயேசுவும் மற்ற சிருஷ்டிப்பும்:**

யோவா 1:3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலே அல்லாமல் உண்டாகவில்லை. யோவான் 1:10 அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. 1கொரி 8:6

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். கொலோசேயர் 1:16 ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களானாலும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

நாம் ஒவ்வொருவரும் ஒரு காரணத்திற்காக வடிவமைக்கப்பட்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஆதியாகமம் 1:28ல் தேவன் அவர்களை நோக்கி, நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி அதைக்கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப்பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துகளையும் ஆண்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். சங்கீதம் 139:14ல் நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள். அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும் என்று கூறப்பட்டுள்ளது.

மனிதனின் சரீரம் ஒப்பற்ற அமைப்பினால் பலவித செயல்பாடுகளின் ஒருங்கிணைப்பினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதயத்தின் அமைப்பு நீ செயல்பட பெலனைக் கொடுக்கிறது. சதைகளின் அமைப்பு நீ பொருட்களைத் தூக்க தாங்க போதுமான பெலனைக் கொடுக்கிறது. ஜீரணத்தின் அமைப்பு நீ சாப்பிடும் உணவை செரிக்கச் செய்து உடலுக்கு பெலனையும் தேவை-யற்றவைகளை வெளியேற்றவும் செய்கிறது. கண்கள் பார்க்கச் செய்கிறது. மூக்கு வாசனைகளை உணரச்செய்கிறது. வாயும் நாக்கும் ருசியறிந்து உணவை சாப்பிடச்செய்கிறது. காதுகள் சத்தங்களை கேட்கச்செய்கிறது. உலகத்தினால் நம்ப முடியாத காரியங்களை ஆச்சரியமாக உருவாக்கப்பட்ட நமது சரீரத்தினால் எதிர்கொள்ள முடியும்.

- Rev.E.Rajan

## சிந்திக்க...

1. நாம் ஒவ்வொருவரும் தேவசாயலில் அவரது விருப்பப்படி சிருஷ்டிக்கப்பட்டோம்.
2. அவரது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரோடும் தேவன் என்றென்றும் தங்கியிருந்து முடிவு பரியந்தம் அவர்களை வழிநடத்துகிறார்.
3. நாம் நமது நித்தியத்தை ஏதாவது ஒரு இடத்தில் செலவிடலாம். அதாவது தேவனோடு இருந்தால் பரலோகத்தில், தேவனை விட்டு விட்டால் நரகத்தில் தேவன் நமக்கு தெரிந்து புரிந்து கொள்ளும் சுதந்தரத்தைக் கொடுக்கிறார். எனவே தீர்மானம் உங்களுடையது மட்டுமே.
5. இயேசுவின் இரத்தம் நமது பாவங்களைக் களைந்து நம்மை பரிசுத்தமாக்கி தேவனோடு பரலோகத்தை சுதந்தரிக்கச் செய்ய முடியும்,

**நீங்கள் தயாரா?**

# புது சந்ததி



# ADAM 2.0

தேவன் வானத்தை பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி முடித்த பின்பு, தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார் அது மிகவும் நன்றாயிருந்தது (ஆதி 1:31). ஆனால் அதன்பிறகு முதல் மனிதனான ஆதாம் பாவம் செய்தான் தேவன் சாப்பிடக்கூடாது என்று தங்களுக்கு விலக்கி வைத்திருந்த ஒரு மரத்தின் கனியை ஆதாமும் அவன் மனைவியும் புசித்தனர். அந்த நேரமே பாவம் மனு குலத்தின் மேல் வந்தது. ஆதாம் காலமுதல் அத்தனை மனிதர்களும் அவனது பாவத்தில் பங்குள்ளவர்களே. நமது முதல் காலமுதல் அத்தனை மனிதர்களும் அவனது பாவத்தில் பங்குள்ளவர்களேநமது மூதாதையான ஆதாமிடமிருந்து நாம் பாவ சுபாவத்தை பெற்று கொண்டோம். பாவத்தின் தண்டனை மரணம். ஆதலால், இவ்விதமாக மரணமும் இவ்வுலகத்தில் பிரவேசித்து, எல்லாருக்குள்ளும் மரணம் வந்தது. அந்த மரணம் ஆவிக்குரிய மற்றும் சரீர மரணமாகும்.

நமக்கு இங்கே ஒரு கேள்வி வரும். சின்ன சிறு குழந்தைகள் கூட பாவம் செய்தவர்களா? இல்லை அவர்கள் பாவம் செய்தவர்கள் என்று கூறவில்லை. ஆனால் பாவத்தின் வித்து அவர்களுக்குள் விதைக்கப்பட்டிருக்கிறது. குழந்தை வளர வளர பாவமும் முளைவிட்டு வளரும். எப்படி ஒரு நாய் குட்டி யாரும் சொல்லி கொடுக்காமலே குரைக்க ஆரம்பிக்கிறதோ, அப்படியே ஒரு குழந்தையும் யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே பாவம் செய்யத் துவங்குகிறது. பாவம் செய்வது மனிதனின் சுபாவத்தில் இருக்கிறது. அப்படியானால் மற்றொரு கேள்வியும் வரும். குழந்தையாகவே மரித்தால் நரத்திற்கு செல்வோமா?/பரலோகத்தி ற்கு செல்லுவோமா? வேதம் இந்த கேள்விக்கு திட்டவட்டமாக பதில் தரவில்லை. சிறு குழந்தையாக பிறந்து மரித்தால் அது எந்த பாவ செயலிலும் ஈடுபடவில்லை என்றால் அது பரலோக இராஜ்ஜியம் சென்றடையும் என்பது பெரும்பாலானோர் கருத்து. தேவன் சிறு பிள்ளைகளை அதிகம் நேசிக்கிறார். சரியானதையே தேவன் செய்வார் (மத் 18:10, மாற்கு 10:14-15)

மரணமானது ஆதாம் முதல் மோசே வரை ஆண்டு கொண்டது என்று ரோம 5:12 ல் எழுதுகிறார். மோசே காலம் வரை நியாப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை என்றாலும் பாவம் உலகத்தில் ஆதாமின் மூலம் பரவி இருந்தது. ஒரு மனிதனால் பாவமும் மரணமும் மனுகுலத்தை ஆண்டது போல் அதே மனுகுலத்தை மீட்க மனிதனாக பிறந்தவர் இரண்டாம் ஆதாம் இயேசு கிறிஸ்து. எந்த மனிதனின் மூலம் பாவம்-மரணம் பிறந்ததோ அதே மனிதனின் மூலம் மீட்டு கொண்டு வருவதையே தேவன் திட்டமாக கொண்டார். ஆதாம் பின்பு வந்தவருக்கு முன் அடையாளமானவன். அதாவது கிறிஸ்துவுக்கு ஆதாம் எவ்விதத்தில் முன்னடையாளமானவன்? ஆதாம் பழைய மனுக்குலத்துக்கு தலையானவன். கிறிஸ்து புதிய ஆவிக்குரிய சந்ததிக்கு தலையானவர். ஆதாம் முதல் மனிதனாக இருந்ததால் ஆதாமின் தாக்கம் போலவே அனைவரும் பாவம் செய்தனர். கிறிஸ்துவோ ஆவிக்குரிய புது சந்ததியின் முதல் மனிதரானதால் தேவ குமார்களில் மூத்தவரானதால், அவருக்கு பின்வரும் யாவர் மீதும் கிறிஸ்துவின் தாக்கம் ஏற்படுகிறது. ஆகையால் அவர்களும் கிறிஸ்துவை போலவே நீதிமான்களாகின்றனர்.

ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானது அல்ல. இயேசு கிறிஸ்துவின் கிரியை, ஆதாமின் கிரியையை போன்றது அல்ல. ஆதாமிடமிருந்து மரணம் வந்தது. கிறிஸ்துவினிடமிருந்து கிருபையின் ஈவு வருகிறது. அது இயேசு கிறிஸ்து என்றும் ஒரே மனுனுடைய கிரியையினால் வருகிறது. நீதியாகிய ஈவோடு கூட நித்திய ஜீவனும், இரட்சிப்பும் வருகிறது. இந்த ஈவானது அநேகர் மேல் அதாவது அனைத்து விசுவாசிகள் மீதும் அதிகஅதிகமாய் பெருகியிருக்கிறது. ஆதாம் மூலமாக மரண த்தின் ஆளுகை வந்தது. கிறிஸ்துவின் மூலமாக ஜீவனின் ஆளுகை வந்தது. ஆதாமிடமிருந்து நாம் யாவரும் மரணத்தை சுதந்தரித்து கொண்டோம். நமது எல்லாரும் சரீரத்தின் படி, மரிப்போம். கிறிஸ்து இல்லாத சமயத்தில் ஆவியாலும் மரிப்போம். ஆனால் கிறிஸ்துவினால் நாம் ஜீவனை இந்த பூமியில் மட்டுமல்ல, பரலோகில் வாழ்கிற நித்திய ஜீவனையும் பெற்று கொண்டோம்.

ஆதாமிடமிருந்து எவ்வளவு பாவம் வந்திருந்தாலும் சரி கிறிஸ்துவினிடமிருந்து அதைவிட அதிக கிருபை வந்திருக்கிறது. பாவம் பெருக பெருக கிருபையும் அதிகதிமாய் பெருகிறது. கிருபை எப்பொழுதும் பாவத்திற்கு மேலாக ஆளுகை செய்யும். எப்படி ஒளியானது இருளின் மீது ஆளுகை செய்திறதோ, அப்படியே கிருபையானது பாவத்தின் மேல் ஆளுகை செய்யும். பாவம் மரணத்தி ற்கு நடத்தும். கிருபை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நித்திய த்திற்கு நடத்தும். கிறிஸ்து பாவத்தையும், மரணத்தையும் முற்றிலும் வெற்றி சிறந்தார் (ரோம 8: 1-2, 1 கொரி 15:5,6) இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து ஆதாமின் பாவத்தினால் விளைந்த சேதத்தை நீக்கிப் போட்டதுடன், இன்னும் எவ்வளவோ நமக்காக செய்திருக்கிறார். அவர் நம்மைத் தேவனுடைய குமாரர்களும், குமாரத்திகளுமாக புதிய சந்ததியாக மாற்றியிருக்கிறார். இந்த புதிய சந்ததியாகிய நாத் பரலோக ஐஸ்வரியங்கள் அனைத்துக்கும் சுதந்தரவாளிகளாக்கியிருக்கிறார். இந்த புதிய சந்ததியின் பிள்ளைகளாய் பழைய ஆதாமின் குணங்களை முற்றிலும் மாற்றி கிறிஸ்துவின் புதிய சந்ததியாகிய அவருடைய கிருபைக்கும், ஈவுக்கும் ஏற்றவர்களாய் வாழ்வோம்.

**முதல் ஆதாம் அறிமுகப்படுத்தியது**

| | |
|---|---|
| ஆதி 2:17 | சாவை அறிமுகப்படுத்தினார் |
| ஆதி 3:7 | நிர்வாணம் அறிமுகப்படுத்தினார் |
| ஆதி 3:14 | சாபத்தை அறிமுகப்படுத்தினார் |
| ஆதி 3:17 | வருத்தத்தை அறிமுகப்படுத்தினார் |
| ஆதி 3:18 | முட்களை அறிமுகப்படுத்தினார் |
| ஆதி 3:19 | வியர்வையை அறிமுகப்படுத்தினார் |
| ஆதி 3:24 | பட்டயத்தை அறிமுகப்படுத்தினார் |

**இரண்டாம் ஆதாம் முறியடித்தது**

| | |
|---|---|
| எபி 2: 19 | மரணத்தை முறியடித்தார் |
| யோவா 19: 23 | நிர்வாணத்தை முறியடித்தார் |
| கலா 3:13 | சாபத்தை முறியடித்தார் |
| ஏசாயா 53:13 | வருத்தத்தை முறியடித்தார் |
| யோவா 19: 5 | முட்களை முறியடித்தார் |
| லூக் 22: 44 | வியர்வையை முறியடித்தார் |
| யோவா 19:34 | பட்டயத்தை முறியடித்தார் |

ஆதாம் அறிமுகம் செய்த அத்தனை பாவத்தையும், அதனால் வரும் மரணத்தையும் இரண்டாம் ஆதாம் சிலுவையில் வெற்றி சிறந்தார்.

- Mr.Selwyn



# முதல் தீர்ப்பு

சிருஷ்டிப்பின் வர்ணனை ஆச்சரியம் தருவது. அது தேவனுடைய அளப்பதற்கரிய ஞானத்தையும், வல்லமையையும் காண்பிக்கிறது. தேவன் ஆணையும், பெண்ணையும் தனது சாயலில் உருவாக்கி, மனிதனைத் தனது சிருஷ்டிப்புகளுக்கு மகுடமாக்கினார். ஆனால், அந்த வர்ணனை ஒரு ஒளிரும் விதத்தில் முற்றுப் பெறாமல், இருளான விதத்தில் முற்றுப் பெறுகிறது. மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்து, அவரிடமிருந்து பிரிக்கப்பட்டான். அதன் பின்னர், என்ன நிகழ்ந்தது என அறிந்து கொள்வோம்.

அவர்களுடைய கீழ்ப்படியாமையைத் தொடர்ந்து, உடனே வேதம் இவ்வாறு கூறுகிறது: பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள் (ஆதி 3:8). ஆக, இங்கு நாம் தேவனுடைய நீதிமன்றம் கூட்டப்படுவதை வாசிக்கிறோம். நீதிபதியாகிய தேவனாகிய கர்த்தர் சட்டத்தை மீறியவர்களை நியாயம் தீர்க்க வந்தார். விசாரணை முறையாக ஆதாமிலிருந்து துவங்கியது. அவன் ஏவாளை குற்றஞ்சாட்ட, அவளோ சர்ப்பத்தைக் குற்றஞ்சாட்டினாள் (ஆதி 3:9-13). ஆதாம், ஏவாள் மற்றும் சர்ப்பம் ஆகிய மூவரும் இணைந்து, தேவனுடைய கட்டளையை மீறிய குற்றத்தைச் செய்ததாக கண்டறியப்பட்டனர். தேவன் சர்ப்பத்திலிருந்து தனது தீர்ப்பைத் துவங்கினார். அது தேவனுக்கு எதிராக கலகம் செய்த லூசிபர் என்னும் தள்ளப்பட்ட கேருபின் பிரதிநிதியாய் அங்கு இருந்தது.

### சாத்தானுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு:

சாத்தானின் வாயாக விளங்கிய சர்ப்பம் சகல காட்டு ஜீவன்களையும் விட தந்திரமும், கூரிய அறிவும் பெற்றது என்ற தனது சிறப்பு அந்தஸ்தை இழந்து, எல்லாவற்றையும் விட சபிக்கப்பட்டதும், வெறுக்கப்பட்டதுமான ஜீவனாக மாறியது (ஆதி 3:1, 14). சாத்தானுக்கு மரண தண்டனைக்கான ஆக்கினை கொடுக்கப்பட்டது. அது ஸ்திரியின் வித்தான ஆண்டவராகிய இயேசுவினால் நிறைவேறும் (ஆதி 3:15).

### ஏவாளுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பில் மூன்று தண்டனைகள்

1. அவளுடைய வேதனை வெகுவாக பெருகும்: மனிதர்களுடைய வாழ்வில் பிள்ளைகள் மிகவும் வாஞ்சிக்கப்படும் வெகுமதிகளாக உள்ளனர். ஆனால் கர்த்தர் பிள்ளைகளை சூழ்ந்த அனைத்துக் காரியங்களையும், கருவுறுதலில் இருந்து இறப்பு வரை, சந்தோஷமும் மிகுந்த வேதனையும் கலந்த ஒன்றாக மாற்றினார். ஆகையால், பிள்ளைகள் பெற்றோருக்கு அதிலும் குறிப்பாக தாய்க்கு மகிழ்ச்சியை மாத்திரம் அல்ல, வெட்கத்தையும் வேதனையையும் கொண்டு வருவார்கள்.

2. அவளுடைய ஆசை அவளுடைய புருஷனை பற்றியுருக்கும்: மேலோட்டமாக பார்க்கும்போது, இந்தக் கூற்று நேர்மறையாக காணப்படுவதாக தோன்றுகிறது. ஆனால் ஆதியாகமம் 4:7ஐ வாசிக்கும்போது, எப்படி பாவம் காயீனை ஆண்டுகொள்ள முயற்சித்ததோ, அப்படியே பெண்ணும் தன்னுடைய கணவனை ஆண்டுகொள்ள முயற்சிப்பாள் எனப் புரிந்துகொள்ள செய்கிறது. இந்த தண்டனையே இன்று அதிக அதிகமான பெண்கள் குழந்தை வளர்ப்பில் தமது பங்கை நிறைவேற்றாதது போன்ற பெண்ணுரிமை வாதத்தினால் ஏற்படும் எல்லா அவலட்சணமான விளைவுகளுக்கும் வேராக இருக்கிறது.

3. அவளுடைய கணவன் அவளை ஆண்டுகொள்ளுவான்: மதிப்பிற்குரிய சமத்துவத்தோடு தேவன் ஆணையும் பெண்ணையும் படைத்ததை பாவத்தினால் மனிதன் இழந்துபோனான் (ஆதி 1:27). மனிதன் தன்னுடைய மனைவியை ஆளுபவனாக மாற்றப்பட்டான். பெரும்பாலும் அவன் அதை தன்னுடைய பலத்தை முரட்டுத்தனமாக பயன்படுத்துவதினாலே சாதிப்பவனாய் இருக்கிறான்.

### ஆதாமுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பில் இரண்டு தண்டனைகள்

1. பூமி சபிக்கப்பட்டிருக்கும்: இதனால் மனிதன் பயிரை கவனமாக பேணி, தான் விரும்பின பலனை அடையும்படிக்கு கடினமாக உழைக்க பலவந்தபடுத்தப்பட்டான். இது குடும்பத்திற்கு அவன் கொடுக்க வேண்டிய நேரத்தை வெகுவாக எடுத்துக்கொண்டது. அது போல, இன்றும் அநேக ஆண்கள் வேலையின் காரணமாக குடும்பத்தை விட்டு, வெளியில் அதிக நேரத்தை செலவிடுபவர்களாய் உள்ளனர். இது பல வேளைகளில் கணவன் மனைவியிடையே அன்பு தாழ்ச்சியை உண்டாகுகிறது.

2. அவன் மண்ணுக்கு திரும்புவான்: ஆதாம் உடனடியாக மரிக்காவிட்டாலும், அவன் மரணத்திலிருந்து தப்பமாட்டான் என நினைவுறுத்தப்பட்டான். இன்றும் முழு மனுக்குலமும் மரண பயத்தின் உறுதியான பிடியில் சிறைப்பட்டிருக்கிறது.

வேதனை தரும் விதத்தில் வேதம் கூறுகிறது, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. அது போலவே, எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது (ரோம 5:12). மேலும் அது கூறுகிறது, எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை (ரோம 3:20). இந்த மரணத்துக்கு ஏதுவான பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை உண்டோ? அதே வேதாகமம் ஆம் என்று கூறுகிறது.

- Rev.Nathaniel Edward

இப்படியிருக்க நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; ... அது இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே (ரோம 3:21-22). ஆனபடியினால் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறவர்களுக்கு ... ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோம 8:1). நாம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய இரட்சகரும் ஆண்டவருமாக விசுவாசித்து, நமது வாழ்க்கையை முழுவதுமாக அவருக்கு அர்ப்பணிக்கும் போது, நாம் பாவம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து நிரந்தரமாக மீட்கப்படுவோம்.



# 4 ஆதிக் கேள்விகள்



2020 -ல் நமது வாழ்வில் மாற்றத்தை உண்டுபண்ணிடும் கேள்விகள்.....

ஒரு பொது கூட்டமானாலும் சரி, அவருடைய எதிரிகள் அவரை கேள்வியால் தடுமாற வைக்க நினைக்கும் போதும் சரி, அவருடைய நண்பர்களிடத்தில் உரையாடும் போதும், மீட்பராகிய இயேசு கிறிஸ்து கேள்வி கேட்டு ஒரு மாற்றத் திற்கு வழியை உண்டுபண்ணி அதன் மூலம் ஒரு வளர்ச்சிக்கு வழி வகுத்தார். இவ்வாறு கேள்வி கேட்டு சிந்திக்க வைக்கும் முறை ஆதி காலத்தில் ஏதேன் தோட்டத்திலே தொடங்கிவிட்டது. ஆதியாகமம் 3 ஆம் அத்தியாயத்தில் 4 விதமான கேள்விகள் ஆதாமை நோக்கியும், ஏவாளை நோக்கியும் கேட்கப்பட்டது. கர்த்தர் ஆதாமிடனிடத்தில் 3 கேள்விகளையும் ஏவாளை நோக்கி 1 கேள்வியையும் கேட்டார். இக்கேள்விகளின் பதில் தேவனுக்கு தெரியாது என்பதால் அவர் கேட்காமல் ஆதாமையும், ஏவாளையும் தங்கள் நிலையை உணர வைக்கவும் அவர்கள் வாழ்வில் மாற்றத்தை உண்டு பண்ணவே தேவன் கேட்டார்.

<u>ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?(வசனம் :9)</u>

இந்த கேள்வி ஆதாமை நோக்கி தேவன் கேட்ட கேள்வி-யாகும். தேவன் ஆதாம் எங்கே இருக்கிறான் என்று நன்கு அறிவார். ஆனாலும் ஆதாம் எந்த நிலையில் தான் உள்ளான் என்பதையும் அவன் இருக்க வேண்டிய இடத்தில் தான் இருக்கிறானா என்பதை அவனை உணர வைக்கவும் தேவன் அவனிடம் இந்த கேள்வியைக் கேட்டார். ஆதாம் மாலை குளிர்ச்சியான சமயத்தில் தன்னை தேடி வந்திருக்கும் தேவனோடு, அவர் அருகில் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவன் தேவனிடத்தில் இருந்து ஒளித்துக்கொண்டிருந்தான். இந்நிலைக்குக் காரணம் அவனின் கீழ்ப்படியாமையேயாகும். இந்த கேள்வி ஏதேன் தோட்டத்தோடு நிற்காமல் பிறந்திருக்கும் இப்புதிய வருடத்திலும் நம் ஒவ்வொருவரோடும் தனிமையில் ஐக்கியம் கொள்ள விரும்பி, நீ எங்கே இருக்கிறாய்? என்று தேவன் நம்மை நோக்கி கேட்கிறார். ஆனால் நாம் பல வேளைகளில் அவர் சமுகத்தில் இருந்து பல வித காரணங்களால் ஒளித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அவருக்கு அநேக விதங்களில் பணி செய்கிறவர்களும் தம் உயிரையும் கொடுக்க தயாராக உள்ளனர். ஆனால் தேவன் விரு-ம்புவது எல்லாம் அவரோடு ஐக்கியம் கொள்ளுவதை மாத்திரமே.

<u>நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்?(வசனம்:11)</u>

நீ வாழும் இவ்வாழ்வில் அநேக சப்தங்கள் உன்னைச் சுற்றிக் கேட்கிறது. முதலாவது உன் மாம்சீக சப்தம், இவ்வுலகத்தாரின் சப்தம், மற்றும் சாத்தானின் சப்தமாகும். இங்கு தேவனுக்கு விரோத மாக பாவம் செய்த உடன் ஆதாமுக்கு பயம் உருவாகிற்று தான் நிர்வாணியாக இருக்கிறோம் என்பது அவனுக்குள்ளாகவே கேட்ட சப்தமாகும். அது அவனை தேவனை விட்டு தூரப்படுத்திட்டு இன்னும் உனக்குள்ளாகவே மாம்சீக சப்தம் என்னால் முடியாது, எனக்கு தகுதி யில்லை, நான் பாவி போன்ற சப்தங்கள் கேட்கும். தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாத வாழ்விற்கு தடையாக வாழ்வில் நிஜம ாக அமைகிறது. தேவன் நாம் அவர் கையில் அலங்காரமாயிருக்கி றோம் என்கிறார். உலகத்தின் சத்தத்தை கேட்டுகேட்டு உலகத்தை படைத்தவர் சொல்லும் வார்த்தை கேட்காமலே போகிறது. அவ்வளவு தூரம் உலகத்தை Attractive ஆக சாத்தான் காட்டுகிறான். அனுதினமும் அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்வோராய் வாழ்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

<u>புசிக்க வேண்டாம் என்று நான் விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ?</u>

கனியை புசித்தாயோ என்று கேட்கிறார். புசிப்பதற்கு நாவு மிக முக்கியம் வேதாகமத்தில் நாவை குறித்து அநேக வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை அனைத்துமே நாவிலிருந்து வெளியேவருகிற காரியம். ஆனால் ஆண்டவர் ஏவாளிடம் ஒரே ஒரு கேள்வியை கேட்கிறார். ‘‘நான் விலக்கின விருட்சம்’’ அதின் கனியை புசித்தாயோ? ஆண்டவர் No என்று சொல்லும் அநேக காரியங்களை நம்முடைய கீழ்ப்படியாமையினாலே செய்கி றோம். இந்த பாவம் ஏவாளிடத்திலிருந்தே வந்தது. அவர் ஒன்றை வேண்டாம் என்று விலக்கினால் அதை செய்யக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்விலும், இதை செய், இதை செய்-யாதே என்று சொல்லும் விஷயத்தில் கவனமாய் செவிகொடுத்து அவர் விலக்கின காரியங்களை செய்யாமல் இருப்பதே ஆசீர்வாதம். லேவியராகமம் 11ம் ஆதிகாரம் முழுவதுமே உணவு கட்டுப்பாடு குறித்து, கடவுள் ஒரு அதிகாரம் முழுவதும் எழுதி அவற்றில் ஒரு சிலவற்றை விலக்கியும் இருக்கிறார். அவை அனைத்தும் நமது சரீர வாழ்வுக்கும், அவற்றிற்கு கீழ்படிந்தால் ஆவிக்குரிய வாழ்வுக்கும் ஆசீர்வாதமாக அமையும். நாம் இப்பொழுது உட்கொள்ளும் அனைத்து உணவுகளுமே நம்முடைய சரீரத்தை கெடுக்கும் உணவாகவே இருக்கிறது. பார்வைக்கு இன்ப மாகவும், புசிப்புக்கு ஏற்றதுமாக தோன்றும். ஆனால் அது தேவன் விலக்கின உணவா? என்று நாம் அறிந்து உண்ண வேண்டும். Diet control எப்போது எது சாப்பிடலாம், எவ்வளவு சாப்பிடலாம் என்பது உங்களுக்கு தெரியும். அவைகளை மட்டும் உண்போம். Food Street அநேக Malls எல்லாவற்றிலும் உணவை மைய மாக வைத்து துவங்குகின்றார்கள். இன்றைய வாலிபர்கள் அதிகம் சம்பாதிப்பதும், அதிகம் செலவழிப்பதுமாக இருப்பதால் இப்படிப்பட்ட உணவு கடைகள் 24 மணி நேரமும் திறந்தே வைக்கிறார்கள். ஆனால் நாம் உண்கிற உணவை குறித்து உள்ள கட்டுப்பாட்டை நான் உங்களிடமே விட்டுவிடுகிறேன். ஜெபித்து சாப்பிடுங்கள். சாப்பிடுமுன், சாப்பாடே கிடைக்காதவர்களுக்காக ஜெபித்து, சாப்பிடும் முன் யோசித்து நோயற்ற வாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

<u>நீ இப்படி செய்தது என்ன? (ஆதி 3:13)</u>

அனைத்துமே செய்தது பெண் என்றாலும் மற்ற மூன்று கேள்விகளை ஆதாமிடம் கேட்டு கடைசியாக ஒரு கேள்வியை மட்டும் பெண் ஆகிய ஏவாளிடம் கேட்கிறார். நீ இப்படி செய்தது என்ன? ஏனென்றால் எல்லா கட்டளைகளையும் ஆதி 2:16ல் ஆதாம் ஏவாள் உருவாகும் முன்பே சொல்லியிருந்தார். ஆகவே அவரிடமே அனைத்தையும் கேட்டார். பின்பு ஏவாளிடமும் ஏன் இப்படி செய்தாய் என்றும் கேட்கிறார். நாம் ஆராதிக்கிற தேவன் நாம் செய்கிறதை எல்லாம் பார்க்கிறார், பேசுவதைக் கேட்கிறார். சிந்திப்பதை எல்லாம் அறிகிறவராய் இருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றும் இல்லை. எங்கும் இல்லை. எனவே நாம் செய்கிற ஒவ்வொன்றும் அவருக்கு பிரியமானதா என்று கேட்டு, அறிந்து செய்தோமானால் தேவன் நம்மில் பிரியப்படுவார். தாவீது தன் வாழ்வில் எல்லா முடிவுகளையும் தேவனிடத்தில் கேட்டு கேட்டு செய்ததால் அவன் வெற்றியுள்ளவனாய் விளங்கினான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் நாமே நம்மை நிதானித்து பார்த்து நல்லது என்று சொல்ல முடிய வேண்டும். ஏதேன் தோட்டத்தில் தேவன் தான் படைத்த ஒவ்வொன்றையும் கண்டு நல்லது என்று அந்த நாளின் இறுதியில் கண்டார். ஆனால் அவர் படைத்த ஏவாள் அக்கேள்வியை தனக்குத்தான் கேட்க மறந்ததின் விளைவாக சாப த்திற்கு ஆளாகினாள். இந்த வருடத்தின் முதலில் நிற்கும் நீ இந்த வருடமுழுதுமாக தேவன் என்னைப்பார்த்து, ஏவாளைப் பார்த்து கேட்ட அதே கேள்வியை கேட்டுவிட கூடாது என்ற சிந்தையோடே நான் தேவனுக்காய் பெரிய காரியங்களை செய்வேன் என்று தீர்மானிக்கலாமே.



- Mrs.Mercy Selwyn

பணிவோடு பறக்கிறது தலைமை த்துவோம் இல்லாமல்
தேவனையே நம்புகிறது தேவைகளை தேடாமல்
கவனத்தோடு பறக்கிறது கவலைகள் இல்லாமல்
மனவலிமையோடு பறக்கிறது எதிர் காற்றின் மீது பயம் இல்லாமல்,
கருத்தோடு பறக்கிறது வேடனுடைய கண்ணியில் சிக்காமல்,
அன்போடு பறக்கிறது அகத்தில் அழுக்கும் இல்லாமல்
சமாதானத்தோடு பறக்கிறது சண்டைகள் எதுவும் கொள்ளாமல்
பறவை கொஞ்சம் உற்றுபார் அது விதைத்து அருகிறதோ
அவைகளை நடத்தும் தேவன் நம்மை அனுதினமும் மறப்பாரோ.




என்று பறவைகளை வைத்து தேவன் மீது எப்படி விசுவாசத்தை வைப்பது என்று பாடல்வரிகள் மூலம் நாம் கற்று இருக்கிறோம். ஆண்டவர் எண்ணற்ற பறவைகளை படைத்துள்ளார். அதில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு பறவையை பற்றித்தான் இங்கு பார்க்க போகிறோம். அதை விரும்பாதவர்; உலகில் உண்டா என்பது தெரியவில்லை. ஆனால் அதை வெறுப்போர் யாவரும் இருப்பதில்லை. அந்த பறவையின் பெயர் புறா ஆகும். புறாவிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் ஐந்து காரியங்களை குறித்து இங்கு பார்ப்போம்.

## 1. Gentleness:

புறா மிகவும் அழகான பறவை. மிகவும் எளிமையான தோற்றம் கொண்ட பறவை. அதன் வெண்மையான நிறமும், மென்மையான குணமும் நினைத்தாலே அனைவருடைய உள்ளத்திலும் உற்சாகத்தை ஊட்டுகிறது. அதன் வெண்மையை பரிசுத்தத்திற்கு அறிகுறியாக ஒப்பிடுவர். நாமும் புறாவைப்போல எளிமை உள்ள உள்ளத்தோடும் மென்மையான குணத்தோடும் வாழ வேண்டும். மென்மையானது ஆவியின் கனிகளில் ஒன்றாகும். மென்மையின் எதிர்நிலைகள் கோபம்,பழிவாங்கும் விருப்பம் மற்றும் சுய பெருக்கம் ஆகும். ஆவியின் கனிவான கனியால் நாம் நிரப்பப்படும் போது, மற்றவர்களை மனகசந்து கோபத்தில் வாதிடுவதற்குப் பதிலாக மற்றவர்களை எளிதில் திருத்துவோம். நம்முடைய இரட்சிப்பை நம்முடைய பெருடையை விட அவர்களின் இரட்சிப்பு மிக முக்கியமானது என்பதை அறிவோம். தீமோ 2:24-25). நாம் உடனடியாக மன்னிப்போம். ஏனென்றால் கடவுளுக்கு எதிரான நம்முடைய குற்றங்களுடன் ஒப்பிடும்போது நமக்கு எதிரான எந்தவொரு குற்றமும் இல்லை. அவர் ஏற்கனவே எல்லாற்றையும் மன்னித்துவிட்டார் (மத் 18:23-35). நம் குறிக்கோள் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதைப் பற்றியும் மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் அதிகமாகி சுயமாக சிந்திப்பதும் பிறர் மீது போட்டி போடுவதும் குறைகூறுவதும் போன்றவை குறைந்து விடும் (பிலிப்பியர் 1:15-18). எங்கே எளிமையும் மென்மையும் உள்ளதோ அங்கேதான் பரிசுத்தம் ஒரு பண்பாக படைக்கப்படும்.

## 2. Genourous:

புறா இனத்தின் தனித்துவமான ஒன்று என்னவென்றால் அது தன்னுடைய குஞ்சுகளுக்கு உணவு தயாரிப்பதே ஆகும். குஞ்சு பொரிக்கும் சில நேரங்களுக்கு முன்பே அது தனக்காக உணவு சேர்ப்பதை நிறுத்தி விடும். அப்பொழுது அது எதுவும் சாப்பிடாமல் இருப்பதால் இந்த தற்காலிக பட்டினி அவர்களின் சந்ததியினருக்கு தூய்மையான பால் தயாரிப்பதை உறுதி செய்கிறது. தான் வருத்தப்பட்டாலும் அது மற்ற உயிர்களுக்கு உதவும் உள்ளதோடு வாழ வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனிதர் பொருள் உடைமைகள் இல்லாவிட்டாலும் பணக்காரர். மக்கெதோனியா நாட்டுச் சபைகளை பார்த்தோமானால் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு பவுல் சாட்சிகொடுக்கிறார் (2 கொரி 8:2-3) நம் ஆண்டவரும் இதையே உபாகமம் அதிகாரத்தில் அவனவனுக்குத் தாராளமாய் கொடுப்பாயாக. அவனுக்குக் கொடுக்கும் போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக. அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார். தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை. ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த்திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்றார்.

## 3. Good Peacemaker:

புறா ஆழ்ந்த தயவின் அமைதியை குறிக்கிறது. இது கவலைப்படுகிற அல்லது பதற்றமான எண்ணங்களை அமைதிப்படுத்துகிறது. புறாவுடைய மெல்லிய சத்தத்தை கேட்டாலே நம்முடைய எண்ணங்களை நாம் அமைதியாக்க கூடும். அதனால் தான் புறாவை அமைதியின் சின்னம், சமாதானப்புறா என்றெல் லாம் நாம் அழைக்கிறோம். அதுமட்டுமின்றி அந்த காலத்தில் மன்னர்களுக்கிடையே சமாதானம் தெரிவிக்க புறாவை தான் பயன்படுத்தினார்களாம். நாமும் நம்முடைய வாழ்க்கையில் சமாதானம் செய்கிறவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று ஆண்டவர் நமக்கு கற்றுக் கொடுக்கிறார் (மத் 5:9) சமாதானம் செய்வது ஒரு தெய்வீக செயலாகும். ஆண்டவர் சமாதானத்தின் இளவரசர், அவரே யெகோவா ஷாலோம், அவர் பிறந்த பொழுது சமாதானம் வந்தது. அவர் வாழ்ந்த போது சமாதானத்தை பூமியில் உள்ள யாவருக்கும் அறிவித்தார். அவர் இறந்த பின்பும் நமக்கு எல்லாவற்றிலிருந்து விடுதலை அளித்து சமாதானத்தை கொடுத்தார். அவருடைய பிள்ளைகளான நாமும் பிறரிடம் சமாதானம் பண்ணுகிறவர்களாக வாழுவோம்.

## 4. Good Mediator:

நோவா காலத்தில் பூமி முழுவதும் மூழ்கி இருந்தது. அப்பொழுது ஜலம் குறைந்ததை அறிவிப்பதற்காக நோவா புறாவை வர சொல்லி அனுப்பினார். புறாவும் பறந்து சென்று ஒரு முறை திரும்பி வந்தது. அதனால் அவர் ஜலம் குறையவில்லை என்று கண்டறிந்தார். பின்பு அனுப்பின பொது அது ஒரு ஒலிவ இலையுடன் வந்தது. Undefined இது போன்று நல்ல செய்தி களை ஒரு தூதரை போல கொண்டு வந்தது. இதே போன்று நாமும் ஒரு தூதரைப் போல அல்லது பரிந்துரையாளர் போல பிறருக்காக அவர்களுடைய வேதனைகளை இறைவனிடம் ஜெபத்தின் மூலம் எடுத்து செல்லுபவர்களாக இருக்க வேண்டும்.

## 5. Genuineness:

புறாக்கள் மற்ற ஒரு தனித்துவமான சிறப்பு என்ன என்றால் அது தான் எந்த இடத்தில் உள்ளோம் என்பதை நமக்கு அறிந்திருக்கும். எங்கு சென்றாலும் அது மிகவும் விசுவாசமாக தன்னை வளர்க்கும் எஜமான்களிடம் வந்து சேரும். தன்னுடைய எஜமானை ஒரு பொது காயப்படுத்தக்கூடாது என்று நினைக்கும் ஒரு பறவையாகும். இதே போன்று தான் நாமும் நம் எஜ மானாகிய ஆண்டவருக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அவரை விட்டு தூரம் செல்கிறோமா, இல்லை அவர் பிரசன்னத்தை விட்டு செல்கிறோமா என்ற கவனத்துடன் இருக்க வேண்டும் நாம் அவருடைய பிரசன்னத்தை விட்டு சென்றால் அவர் வருந்துகின்ற ஆண்டவரை இருக்கிறார். நாம் நம் வழிகள் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அவருடைய வழிகளே நமக்கு செம்மையான வழிகள்.

- Ms.Sureka



2nd WEEK MESSAGE

(ஆதியாகமம் 3-5)

# சிருஷ்டிப்பில் நுழைந்த பாவம்

பரலோகத்திலிருந்து விழுந்த சாத்தானைக் குறித்து மறைமுகமாக ஏசாயா 14:12-14, எசேக்கியேல் 28:12-18 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வசனங்கள் சாத்தான் ஏன் விழுந்தான் என்பதை விளக்குகின்றது. ஆனால் அவன் எப்பொழுது விழுந்தான் என்பது குறிப்பிடவில்லை. நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், பூமியை உருவாக்கும் முன்பே தேவ தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள். (யோபு 38:4) ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளை தூண்டுவதற்கு முன்பே சாத்தான் விழுந்துவிட்டான். (ஆதி 3:1-14). தேவ தூதர்கள் சிருஷ்டிப்புக்குப் பின்னும், ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளை பாவத்திற்கு தூண்டுவதற்கு முன்னும் சாத்தானின் வீழ்ச்சி நடந்திருக்கும்.

தேவன் முதல் மனிதன் ஆதாமையும் பின்பு ஏவாளையும் உருவாக்கி அவர்களை ஏதேன் தோட்டமாகிய சரியான வீட்டில் தங்க வைத்தார். உண்மையில் இந்த நேரத்தில் அனைத்தும் சரியாக இருந்தது. சாத்தான் ஏவாளிடம் பெருமையைக் குறித்து கூறி சூழ்ச்சிக்குள் தள்ளினான். தேவனை நம்புவதற்கு முன் ஏவாள் சாத்தானை நம்பிவிட்டாள். தவிர்க்கப்பட வேண்டிய கனியை தான் புசித்ததுமல்லாமல் தன் கணவனாகிய ஆதாமையும் புசிக்க வைத்தாள். அந்த சமயத்தில்தானே ஆதாமும் ஏவாளும் தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தேவ மகிமையை இழந்து போனார்கள். அந்நேரம் முதற்கொண்டு மனிதனின் உள்ளம் பாவத்தால் நிறைந்திருந்தது. இந்த ஆதிபாவம் எல்லா சந்ததிக்குள்ளும் பிரவேசித்தது. ஆதாம் ஏவாளை தேவன் சோதிக்கவில்லை. மேலும் சுதந்திரமாக செயல்பட முடியாத இயந்திர மனிதனாகவும் படைக்கவில்லை. தன்னுடைய அன்பினால் சரியானதை தெரிந்துகொள்ளும் ஞானத்தைக் கொடுத்தார். அதே ஞானத்தை இப்பொழுதிருக்கும் மக்களுக்கும் கொடுத்திருக்கிறார். தேவன் தம்மை பின்பற்றும்படியாக யாரையும் கட்டாயப்படுத்தவுமில்லை.

**சாத்தானின் வீழ்ச்சியினால் பூமிக்கும் இந்த சமுதாயத்திற்கும் ஏற்பட்ட விளைவுகள்:**

1. ஆதாம் ஏவாள் மற்றும் அவர்கள் சந்ததியார் யாவரும் ஆவிக்குரிய வழியில் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டார்கள்.
2. சாத்தான் தன் வயிற்றினால் ஊர்ந்து மண்ணைத் தின்னும் சாபத்திற்கு உள்ளானான்.
3. பெண்ணானவள் இரண்டு விதத்தில் நியாயந்தீர்க்கப்பட்டாள். முதலாவது பிள்ளைப்பேற்றின் போது வேதனையை அநுபவிப்பாள், இரண்டாவது அவள் புருஷனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்பது.
4. மனிதனானவன் வேர்வை சிந்தி உழைக்க வேண்டும் என்று நியாயந்தீர்க்கப்பட்டான்.
5. இந்த வீழ்ச்சியினால் பூமியில் தேவ கட்டளைகள் சீரழிந்து போகும் படியாயிற்று.
6. இந்த வீழ்ச்சியினால் மிருகங்களின் ராஜ்யங்களும் பாதிக்கப்பட்டது.
7. இனி ஏதேன் தோட்டம் சமுதாயத்தின் உறைவிடமாக இருக்காது.

தேவ சித்தத்தின்படி சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், பாவத்தில் விழுந்து தேவனின் சித்தத்தை நிறைவேற்றாதவனானான் என்பதை நாம் தியானித்தோம். மனித சமுதாயத்தின் பாவ வீழ்ச்சி பரிதாபகரமானது. அதன் விளைவுகளை நாம் இன்றும் நம் கண்களால் காண்கிறோம் மற்றும் அனுபவிக்கின்றோம்.

## சிந்திக்க...

1. பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோமா?
2. பாவ சூழ்நிலைகளை நாம் எப்படி மேற்கொள்வது?
3. வேதாகமம் நம்மை பாவத்திற்கு விலக்கிக் காக்கும் மற்றும் பாவம் நம்மை வேதாகமத்தை விட்டு பிரித்துவிடும். நீங்கள் தேவ வார்த்தைக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?
4. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை உங்களுக்கு உண்டா?
5. தேவ வார்த்தை, ஜெபம் விசுவாசிகளோடுள்ள ஐக்கியம் மற்றும் சுவிசேஷ ஊழியம் ஆகியவை இந்த பாவம் நிறைந்த உலகத்திலிருந்து நம்மை பாதுகாக்கும்.

## தேனீின் பரிசுத்தம்...

தேனீின் உடலில் ஒரு துளி மது பட்டால் கூட அதனால் தாங்க முடியாதாம். உடனே தன்னைத் தானே உடம்பில் கொட்டி உயிரை மாய்த்துக் கொள்ளுமாம். அத்தனை பரிசுத்தமாய் தன் உடம்பை பாதுகாத்துக் கொள்கிறது. உலகத்தின் பாவக்கறை நம் மீது பட்டவுடன், நம்முடைய ரியாக்ஷன் எப்படி இருக்கிறது? தேவனுக்காக பரிசுத்தத்தை காத்துக் கொள்கிறோமா என யோசித்துப் பார்ப்போம்...



- Rev.E.Rajan

# இமைப்பொழுது விண்ணப்பம்

1. 2019ம் ஆண்டு முழுவதும் கண்மணி போல் பாதுகாத்து இம் மட்டும் ஜீவன், சுகம், பெலன், நல்வாழ்வு தந்து தகப்பனாகவும், தாயாகவும், சகோதரராகவும், நண்பராகவும் வழி நடத்திய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.
2. நம் வாழ்வில் தீர்மானங்கள் எடுக்க தடுமாறிய சூழ்நிலையில், நம்மை திடப்படுத்திய பாதையை சீர்படுத்திய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.
3. நோய்கள், இழப்புகள், நெருக்கடிகளில் நம்மை தேற்றி, பெலப்படுத்தி தமது கிருபையால் பாதுகாத்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.
4. தேவன் நம் குடும்ப வாழ்வில் செய்த நன்மைகளுக்காகவும், தாய் தந்தை, சகோதர, சகோதரிகள் உறவினர்களுக்காக நன்றி செலுத்துவோம். அவர்களும் தேவ சித்தம் செய்ய ஜெபிப்போம்.
5. நம் குடும்பத்தில் தேவன் கொடுத்த குழந்தைகளுக்காக நன்றி செலுத்தி, அவர்களை தேவனுக்கு ஏற்ற பிள்ளைகளாக வளர்க்க பெற்றோருக்கு தேவ ஞானம் கொடுக்க ஜெபிப்போம்.
6. தேவன் நம் வாழ்வில் தந்துள்ள நல்ல நண்பர்களுக்காக ஜெபிப்போம். தவறான வழிகளில் நடக்கும் நண்பர்கள் மனம் மாற தேவ அன்பை கண்டடைய ஜெபிப்போம்.
7. குடும்பங்களில் கிரீடமாக கொடுக்கப்பட்டுள்ள முதியோருக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இவர்களுக்கு தேவன் நல்ல சுகம், பெலன், ஆயுசு நாட்களை கொடுக்க அவர்கள் பாராமரிக்கப்பட ஜெபிப்போம்.
8. தேவன் கொடுத்த கல்வி, பள்ளி கூடங்கள், கல்லூரி ஆசிரியர்களுக்காகவும், விரிவுரையாளர்களுக்காகவும் அவர்கள் மூலமாய் கற்ற நற்பண்புகளுக்காக நன்றி செலுத்துவோம்.
9. தேவன் நமக்கு கொடுத்துள்ள வேலைக்காகவும், அதை உண்மையும், உத்தமுமாய் செய்ய தேவன் தந்த பெலன், சுகம், ஞானம் ஆகியவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் செலுத்துவோம். வரும் காலத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்பட நேர்மையாய் பணி செய்ய ஜெபிப்போம்.
10. தேவன் கொடுத்த தேவாலயம், ஆராதனை நேரங்கள், வேத ஆராய்ச்சி நேரங்கள் ஜெப நேரங்கள், உபவாசம் ஆகிய-வற்றிற்காகவும், நம்முடைய ஜெபங்களுக்கு குறித்த நேரத்தில் பதில் அளித்து அற்புதமாய் வழி நடத்தியதை நினைத்து நன்றி செலுத்துவோம்.
11. முழு நேர தேவ ஊழியம் செய்ய கொடுக்கப்பட்டுள்ள எல்லா போதகர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேகர்கள், பணித்தள ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் ஒவ்வொருவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். தேவ வசனத்தை தீர்க்கமாய் எடுத்துரைக்க தேவ ஞானம் கொடுக்கப்பட ஜெபிப்போம்.
12. ஜனவரி 12ம் நாள் தேசிய இளைஞர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இளைஞர்கள் தேவ பயம் உடையவர்களாகவும், தேசப்பற்றுமிக்கவர்களாகவும், நல்லொழுக்கமுடையவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் வாழ ஜெபிப்போம்.
13. தேவன் கொடுத்த கனிம மற்றும் இயற்கை வளங்கள், நல்ல கால சூழ்நிலைகள், தேவையான மழை ஆகியவற்றிற்காக நன்றி செலுத்துவோம்.
14. கடந்த ஆண்டு நடைபெற்ற எல்லா மாநில வாலிபர் மற்றும் இளம் வாலிபர் கூடுகைகளில் தேவ நாமம் மகிமைப்பட்டதற்காக நன்றி செலுத்துவோம். தேவனை அறிந்த பிள்ளைகள் விசுவாசத்தில் நிலைத்திருக்க ஜெபிப்போம்.
15. ஜனவரி 15ம் நாள் தேசிய இராணுவ தினம். நம் நாட்டின் எல்லைகளை பாதுகாக்க சுமார் 1.5 மில்லியன் ராணுவ வீரர்கள் உள்ளனர். ஒவ்வொரு இராணுவ வீரர்களுக்காகவும் அவர்கள் இரட்சிப்பை கண்டடைய அவர்கள் மத்தியில் சுவிசேம் பிரசங்கிக்கப்பட ஜெபிப்போம்.
16. மிஷனெரி ஊழியத்தில் அநேக தடைகள் காணப்பட்டாலும், தேவன் கொடுத்த விசுவாச, ஆவிக்குரிய ஆத்தும அறுவடைக்காகவும், புதிய பணித்தளங்கள், ஆலயங்களுக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்துவோம்.
17. புதிதாக மினெரிகளாகவும், சுதேச ஊழியர்களாகவும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்காகவும் நன்றி செலுத்துவோம். அவர்கள் விசுவாச வாழ்வை தேவன் இன்னும் பெலப்படுத்தவும், ஆவிக்குரிய போராட்டத்தில் முன்னேறி செல்லவும் ஜெபிப்போம்.
18. தேவனுடைய கிருபையால் குடிப்பழக்கங்கள், புகைப்பிடித்தல் போதைப்பொருட்கள் போன்றவற்றிலிருந்து விடுதலை பெற்ற ஒவ்வொரு இளைஞர், வாலிபர், முதியோருக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம். அவர்கள் மீண்டும் விழுந்து போகாமல் தேவனுக்கு ஏற்ற பிள்ளைகளாய் ஜீவிக்க ஜெபிப்போம்.
19. இந்திய தேசத்தில் ஆட்சி பொறுப்பில் உள்ள ஜனாதிபதி, பிரதமர், ஒவ்வொரு மாநில முதல் அமைச்சர்களும் இந்த புதிய வருடத்தில் தங்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட பணியை நல்மனதுடன் உண்மையாயும், நல் மனசாட்சியுடனும் செய்ய ஜெபிப்போம்.
20. ஏழ்மை மற்றும் அறியாமையை ஒழிக்க அரசு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மினெரிகள் எடுக்கும் முயற்சிகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அவர்கள் முயற்சிகள் மெய்ப்பட ஜெபிப்போம்.
21. இந்தியா காய்கறி பருப்பு, பால், பழங்கள், உணவு பொருட்கள் உற்பத்தியில் முன்னிலை வகிப்பதற்காக தேவனை துதிப்போம். இன்னும் முன்னேற ஜெபிப்போம்.
22. இந்தியா இயற்கை சார்ந்த மின்சக்தி உற்பத்தியில் முன்னேறி வருகிறது இதற்காக நன்றி செலுத்துவோம்.
23. உலகளவில் இந்தியா உயர்தர விஞ்ஞான ஆராய்ச்சி பங்களிப்பில் 2வது இடத்தில் உள்ளது. ஆராய்ச்சியளார்கள் உருவாக ஜெபிப்போம்.
24. ஜனவரி 24ம் நாள் பெண் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. தேசத்தில் பெண் குழந்தைகளுக்கு தரமான கல்வி, ஊட்டச்சத்து, நீதி, மருத்துவம், பாதுகாப்பு கிடைக்கவும், நல்மதிப்பு கொடுப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வு மாறவும் ஜெபிப்போம்.
25. இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து மக்களின் சராசரி வாழ்நாள் படிப்படியாக உயர்ந்து 69 வயதாக உள்ளது. தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக நன்றி செலுத்துவோம்.
26. ஜனவரி 26ம் நாள் நமது நாட்டின் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது. உலகில் மிகப்பெரிய குடியரசு நாடாக நம் தேசம் திகழ்வதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். ஊழல் இல்லாத சூழ்நிலை உருவாக ஜெபிப்போம்.
27. நம்முடைய ஜெப வேண்டுதலை கேட்டு ஊழியத்திலும், தேசத்திலும், மக்கள் வாழ்வு நிலையில் கொடுத்துள்ள மாற்றத்திற்காக ஜெபிப்போம்.
28. உலகிலேயே அதிகமான வாலிபர்கள் உள்ள இளமையான தேசமாக இந்தியா உள்ளதற்காக தேவனை துதிப்போம்.
29. உலகளவில் சாலைகளை இணைக்கும் திட்டத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதற்காக தேவனை துதிப்போம்.
30. புதிய ஆண்டில் தேசத்திற்காகவும், சுவிசேஷத்திற்காகவும் சபைகளுக்காகவும், திறப்பிலே நின்று ஜெபிக்கும் ஜெபக்குழுக்கள் எழும்பவும், செயல்பட்டு வரும் ஜெபக்குழுக்கள் ஆவிக்குரிய புத்துணர்ச்சி பெற ஜெபிப்போம்.

- Mrs.Vincy Mervin



முதல் வார ஜெபக்குறிப்புகள்

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமைச் செயலக

## ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக...

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூன்று மிக முக்கியமான பிரிவுகளாக பிரிந்து செயல்பட்டு வருகிறது. அவைகளில் ஒன்று முன்னிலையிலிருந்து பணியாற்றும் பணித்தள ஊழியங்கள், இரண்டாவது அவ்வாறு முன்னிலையிலிருந்து பணியாற்றும் ஊழயங்களின் தேவைகளுக்காக ஜெபிப்பதும், நிதிதேவைகளை கண்டுபிடிப்பதுமான முன்னேற்றப்பணி, மூன்றாவது அவை அனைத்தின் நிர்வாகப்பணிகளை மேற்கொள்ளும் தலைமைச்செயலகம். இவைகளில் இந்த மாதம் தலைமை செயலகத்தின் ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் கருத்துடன் ஜெபிக்க இருக்கிறோம். கடந்த ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியர்கள் எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றையும் தேவன் ஆசீர்வதித்து, தந்ததுள்ள பெரிதான விளைவுகளுக்காக ஆண்டவரைத் துதிப்போம். தொடர்ந்து இந்த 2020 ஆண்டும் தேவன் அப்படியாக வழிநடத்த ஜெபிப்போம்.

### தலைமைச்செயலக பணியாளர்களின் பெயர்களை சொல்லி ஜெபிப்போம்:

பொதுகாரியதரிசி : சகோ. சுதர்சன்தாமஸ்

01.தலைமை அலுவலகம்: சகோ. பிரபாகர சாரதி, சகோதரி. மணிசெல்விசாரதி, சகோ. சுதாகர்

02.நிர்வாகத்துறை: சகோ. ஜேம்ஸ் அருள்ராஜ், சகோதரி. ஞானபுஷ்பம், சகோதரி. மேகலா, சகோ. ஜான் குல்லு, சகோதரி. கரோலின், சகோ. ராஜேந்திரன், சகோ. பெஞ்சமின், சகோதரி. ஸ்டெல்லா, சகோதரி. பாப்பு, சகோதரி. சரண்யா, சகோ. நாகரத்தினம்

03.மனிதவள மேம்பாட்டுதுறை : சகோ. ஆபிரகாம், சகோ. சாம் ஜெபகுமார், சகோதரி. கிளாடிபியூலா, சகோ. முரளிதரன்

04.தொடர்புதுறை:சகோ.ஹறீஸ்,சகோதரி.ஆல்பி,டேவிட் சகோ. பிரபாகரன், சகோ. ஜோஷ்வா, சகோதரி. பியூலா, சகோ. சக்திவேல், சகோ.ஆல்வின், சகோதரி. குளோடில்டா

05.கணினி துறை: சகோ. சகோ. நத்தானியேல் எட்வர்ட், சகோதரி. ஆலிவ், சகோ. அஜீத், சகோ. நவராஜ்

06. பொருளாளர் அலுவலகம்:

பொருளாளர்: சகோ. மணி சாமுவேல், சகோ. ஜான் டேவிட்ராஜ், சகோ. சாலமோன் ஜெபராஜ்

07.நிதித்துறை : நிதிசெயலர்: சகோ. எட்வர்ட்சாம்,

**Receipts Sec.:** சகோ. ஜான் ஆண்ட்ரூ, சகோதரி. விஜய மலர், சகோதரி. ஜாக்குலின், சகோதரி. ஜான்சி, சகோ. இஸ்ரேல், சகோதரி. ரூபி, சகோ. கோவிந்தராஜ், சாமுவேல், சகோ. சுந்தர்ஜெயக்குமார், சகோதரி. நான்சி, சகோதரி. ஜட்சன் மேரி, சகோ. ஆதித்தியன், சகோ. ஸ்பர்ஜன், சகோதரி. பிருந்தா, சகோ. ஆல்வின் எபினேசர், சகோ. டேவிட்

**Payments Sec.:** சகோ. சண்முகம், சகோதரி. ராஜரத்தினம், சகோதரி. டெய்சி, சகோதரி. மங்கயர்கரசி, சகோ. சுரேஷ்ஜோசப் சகோதரி. கோமாகிரேஸ், சகோதரி. பியூலா

**Accounts Sec.:** சகோதரி. ஃபீரிடா, சகோ. எலியா, சகோ.லாசர், சகோ.கேனாஸ்,சகோ. செல்வின் சௌகன்

**Cashier:** சகோ. ஏசுபிரகாஷ் ,

**Salary fund office:** சகோ. பாபு பெஞ்சமின்

08.தணிக்கை துறை: சகோ. ராஜவேல், சகோ. ஜெயராஜ், சகோ. டேனியேல் சுதாகர், சகோ. பால்மோகன், சகோ. பியர்சன் பிரின்ஸ், சகோ. விக்னேஷ்,

**09.Child Care:** சகோ. SK. தாமஸ், சகோதரி.மேகி எஸ்தர், சகோ. ஆலிவர், சகோ. ஸ்டீபன்

**10.Overseas desk:** சகோதரி. சாந்தி, சகோதரி. பிளஸ்ஸி

**11.Friends publications:** சகோ. இ.ராஜன்

**12.Church Mission Relation & Partners:** சகோ. பால்சாலமோன்

**13.Division Mobilization:** சகோ. இம்மானுவேல், சகோதரி. வசந்தி, சகோதரி. ஷைனிசுரேஷ், சகோ. சுந்தரம், சகோ. முத்துதுரை, சகோ. ரஞ்சித்,

**14.Zonal Mobilization:** சகோ. ஜான் சுந்தர்சிங், சகோதரி. விஜிலா

**15.Regional Mobilization:** சகோ. ரவிக்குமார், சகோ. ஜார்ஜ்,

### All Wings

16.ஜெபப்பிரிவு: சகோ. டேனியேல்டேவிட், சகோதரி. மார்த்தாள், சகோதரி. கிறிஸ்டி

**17.Scan** பிரிவு : சகோ. டேனியேல் அருள்மணி

18.பெண்கள்பிரிவு: சகோதரி. கிறிஸ்டி ராஜன்,

19.சிறுவர்பிரிவு: சகோதரி. மேரி டேனியேல், ஜெயராணி

20.வாலிபர் மற்றும் இளம்வாலிபர் பிரிவு, கேரித் அலுவலகம்: சகோ. செல்வின், சகோதரி. மெர்சி, சகோதரி. ஷீலாமேரி

21.தமிழ்நாடு வாலிபர் பிரிவு: சகோ. கிங்ஸ்லி

## ஜெபிப்போம்:

### தேவனோடுள்ள தனிப்பட்ட உறவுக்காக ஜெபிப்போம்:

1. தேவனுக்கும், ஊழியர்களுக்கும் இடையே உள்ள உறவு தொடர்ந்து இந்த ஆண்டும் செம்மையாக இருக்க...
2. தனிப்பட்ட ஜெப வாழ்க்கைக்காகவும்,ஆவிக்குரிய முதிர்ச்சிக்காகவும், ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்காகவும்
3. தேவன் அழைத்த அழைப்பில், அற்பணிப்பில் தரிசனத்துடன், தீவிரத்துடன் பணிகளை நிறைவேற்ற ஜெபிப்போம்.

### வாழ்க்கை மற்றும் சரீர தேவைக்காக ஜெபிப்போம்:

1. சரீர சுகத்திற்காகவும், அநேக ஊழியர்களின் பெலவீனங்கள் மாறி, தேவ பெலத்துடன் ஊழியங்களை நிறைவேற்ற
2. மனச்சோர்விலிருந்து பெலப்பட்டு தேவ கிருபையோடு ஊழியங்களை நிறைவேற்ற ஜெபிப்போம்.
3. தனிமை உணர்ச்சி, மனத்தளர்வினின்று மிஷனெரிகள் காக்கப்பட ஜெபிப்போம்.

### மிஷனெரிகளின் குடும்பத்திற்காக ஜெபிப்போம்:

1. தொடர்ந்து குடும்பமாக ஊழியங்களை நிறைவேற்றவும், கணவன்– மனைவி நல்லுறவுக்காகவும், சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும் ஜெபிப்போம்.
2. மினெரிகளின் பிள்ளைகளின் பரிசுத்த வாழ்விற்காகவும், கிறிஸ்துவில் வேர் கொண்டு வளரவும் ஜெபிப்போம்.
3. சரீர, ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கப்பட, பிள்ளைகளின் படிப்பு தேவைகள் சந்திக்கப்பட. ஜெபிப்போம்.

### உடன் ஊழியர்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும்

1. மிஷனெரிகளோடு இணைந்து பணியாற்றவும், தேவையான அன்பிலும், ஐக்கியத்திலும் வளரவும்
2. ஒவ்வொரு ஊழியரும் அதிகாரி என்ற நிலையின்றி, சீஷன் என்ற நிலையில் ஊழியம் செய்ய ஜெபிப்போம்.
3. ஊழியம் பலவிதங்களில் செய்யப்பட்டாலும், அனைவரும் தேவனுடைய இராஜ்யத்திற்காக பணி செய்கிறோம் என்ற உணர்வோடு பணி செய்ய ஜெபிப்போம்.

– Rev.Prabaker Sarathy



# இந்திய தேசத்தில் விபச்சாரம் கொடிய பாவம் நீங்க ஜெபிப்போம்.

1

மிருகத்திடமிருந்து மனிதர்களிடமாய் திரும்பி நின்று உலகையே பயமுறுத்தி வரும் நோய் எயிட்ஸ் 1986ம் ஆண்டு SIV Simian Immuno Deficiency Virus-லிருந்து வந்த HIV Human Immuno Deficiency Virusதான் இந்நோய்க்கு காரணம். இவை எப்படி மனிதர்களை தாக்கியதோ, அதைப்போல் அன்றும் இன்றும், மனிதர்களிடம் தனது சர்வாதிகார ஆட்சியை நிலைவரப்படுத்திக்கொண்டு இருக்கிறது. இன்று AIDSஇல்லாத நாடுகளே இல்லை என்றாலும் முதல் மூன்று இடங்களில் தனக்கென நிரந்தரமான இடத்தை இந்தியா ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இதில் முதன்மை இடத்தில் வகிப்பது மஹாராஷ்டிரா, இந்த கொடிய நோய்க்கு காரணம் வைரஸாக இருந்தாலும் அவை ஊடுருவும் அநேகர் விபச்சார பாவங்களில் விழுந்து கிடப்பவர்கள் மனிதர்களே. தேவன் அழகாக உருவாக்கிய திருமண பந்தத்தை உதறி முறைத்தவறி திரிபவர்களால் ஒரு பாவமும் அறியாத சின்னம் சிறு சிசுக்களும் பாதிக்கப்பட்டு தாங்கள் நாட்களை எண்ணுகின்றனர். விபச்சாரமே பெரியபாவம் என நினைத்திருக்கும் போது அதை ஓரங்கட்டி இன்று ஓரினச்சேர்க்கை பாதுகாப்பானது என பலரும் கருத துவங்கிவிட்டனர். லேவி 18: 22ல் தேவன் அதை பாவம் என காண்பிக்கிறார். இந்திய தேசத்தில் முக்கிய நகரங்களில் பிராத்தல் என்று அழைக்கப்படும் விபச்சார விடுதிகள் உள்ளன. ஒவ்வொரு விடுதியிலும் சுமார் 5000 முதல் 11000 பேர் பணி செய்கின்றனர். இங்கு வரும் ஆண்களுக்கு வயது வரம்பே கிடையாது. ரோட்டில் வாழ்பவன் முதல் பணக்காரன் வரை இங்கு வந்து செல்கின்றனர். திருமணமான பெண்களும், கல்லூரி, உயர்நிலை பள்ளி மாணவிகளும் கூட தற்போது ஆடம்பர வாழ்விற்கும், பணத்திற்கும் ஆசைப்பட்டு சர்வ சாதாரணமாக இந்த தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்காக ஜெபிப்பது நமது கடமை.

## ஜெபக்குறிப்புகள்:

1.மும்பையிலுள்ள பள்ளி மாணவிகள் பகுதிநேரமாக விபச்சாரத்தொழிலில் ஈடுபடுகின்றனர். பணத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு தங்கள் வாழ்வை துர்ச்சமாக மதிக்கும் இம்மாணவிகளின் எண்ணங்கள் மாற ஜெபிப்போம்.
2. இப்படிப்பட்ட இச்சையின் ஆவிகள் இந்தியாவை விட்டே நீங்க ஜெபிப்போம்.
3. விபச்சாரத்தில் அடிமைப்பட்டு வாழ்கிற இளைஞர்கள் பாவ உணர்வடைந்து அவைகளிலிருந்து விடுபட
4. இந்தியாவில் எயிட்சினால் பாதிக்கப்பட்டோர் 39% பெண்கள், 35 % ஆண்கள் இவர்களுக்காய் ஜெபிப்போம்.
5. தமிழ்நாட்டில் 4.68% மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். இங்கு செல்லும் லாரி ஓட்டுநர்கள் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. இவர்களுக்காய் ஜெபிப்போம்.
6. 15 முதல் 19 வயது வரை உள்ள இளம் வாலிபர்கள் இந்நோயினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். அவர்கள் எதிர்காலத்திற்காய் ஜெபிப்போம்.
7. விபச்சாரத்தொழிலுக்குள் சூழ்நிலைகளினால் தள்ளப்பட்ட சிறுமிகள் மற்றும் பெண்கள் விடுபட ஜெபிப்போம்.

## PRAY FOR THE 8 LARGEST RED LIGHT AREAS ACROSS INDIA

1. Sonagachi, Kolkata - With the regrettable title of Asia's largest red light area, Sonagachi is a world in itself. It's inhabited by more than 11,000 sex workers.
2. Kamathipura, Mumbai - India's second largest red light district houses a staggering number of sex workers
3. Budhwar Peth, Pune - Apparently the third largest red in India with around 5000 commercial sex workers.
4. Meergunj, Allahabad - This red light district has a notorious reputation for illegal trafficking and forced prostitution.
5. G.B. Road, Delhi Another large red light area, this place is known for the hundreds of brothels along the streets.
6. Chaturbhujsthan, Muzaffarpur 7. Itwari, Nagpur 8. Shivdaspur, Varanasi -UP

- Ms.Hepzi

3ம் வார ஜெபக்குறிப்புகள்

## மாதம் ஒரு மக்கள்



# யாதவ் மக்கள்

யாதவ் மக்கள் உத்திரப்பிரதேசத்தில் வசிக்கின்றனர். யாதவ் மக்கள் முதலில் அகிர் என்று அழைக்கப்பட்டனர். தங்களை கடவுள் கிருஷ்ணருடன் இம்மக்கள் தொடர்பு படுத்திக் கொள்வர். யாதவர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம். தங்கள் பெயருக்குப்பின்னர் யாதவ் என்ற பெயரை எல்லா யாதவ்களும் எழுதிக் கொள்வர்.

மாடுகளை பராமரித்து, பாலையும் அதன் துணைப் பொருட்களையும் வைத்து வியாபாரம் செய்வர். நிலமுள்ள யாதவர்களும் நிலமற்ற யாதவர்களும் உண்டு. யாதவர்களில் சிலர் தொழில் முனைவோர், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள் அரசியல் தலைவர்களாகவும் உள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் இவர்கள் பீஹார் உத்திரப்பிரதேசம் மாநிலங்களில் அரசியல் செல்வாக்கு உடையோராய் விளங்குகின்றனர்.

வடக்கில் உள்ள யாதவர்கள் பேசும் மொழி இந்தோ-ஆரிய குடும்பத்தைச் சார்ந்தது. தெற்கில் உள்ள யாதவர்கள் பேசும் மொழி திராவிட குடும்பத்தைச் சாா்ந்ததாகும்.

யாதவ்கள் மத்தியில் நடைபெற்ற ஊழிய த்தின் விளைவாக இதுவரையில் 21க்கும் அதிக மானோர் விசுவாசிகளாக மாறி கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர்.

### ஜெபிக்க:

01.யாதவ் மக்கள் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர.... ஜெபிப்போம்.

02.தங்களுடைய மூட நம்பிக்கைகளையும் பழைய கடவுள்களையும் விட்டு மனந்திரும்பி, இயேசுவண்டை வர ஜெபிப்போம்.

03.நமது ஆலயத்தில் உள்ள விசுவாசிகளில் பெரும்பாலோர் சமார் இன மக்களாக இருப்பதால், அவர்கள் இருக்கும் இடத்திற்குள் வர விரும்புவதில்லை. இந்நிலை மாற ஜெபிப்போம்.

04.யாதவ் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய தனித்த ஊழியமும் தனிப்பட்ட ஊழியர்களும் முன்வர...

05.எளிதில் உணர்வடையக்கூடிய இம்மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய தனிப்பட்ட மிஷனெரிகள் முன்வர வேண்டும். ஜெபிப்போம்.

- Mrs.Sheela Mary

## மாதம் ஒரு மொழி



# தேத்தி

**மொழி** : தேத்தி

**இம்மொழி பேசும் மொத்த மக்கள் தொகை:** 1,65,426

**பேசப்படும் மாநிலங்கள்** - பீஹார், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், மேற்கு வங்காளம்

மொழிக் குடும்பம் : இந்தோ ஆரியன்

**எழுத்து வடிவம்** : உண்டு / தேவநாக்ரி

**வேதாகமம்:** தேத்தி மொழியில் வேதாகமம் உண்டு. 1811 - 1998க்கு உட்பட்ட காலங்களில் புதிய ஏற்பாடும், 1818 - 2000ம் ஆண்டிற்கு உட்பட்ட காலங்களில் முழு வேதாகமும் வெளியிடப்பட்டுள்ளது.

**மொழி அறிமுகம்:**

தேத்தி மொழி மைதிலிக்ஷ் எனும் மொழியின் உட்பிரிவாக அறியப்படுகிறது. பீஹாரிலுள்ள கோஷி, புர்னியா மற்றும் முங்கேர் பகுதிகளில் அதிகமாக இம் மொழி பேசப்படுகிறது. இம்மொழி பேசுவோர் மத்தியில் சுமார் 2.9% மட்டும் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

**மொழி பேசும் மக்கள்:**

முஷாஹர்க்ஷ் என்ற பெயரில் அறியப்படும் இம்மக்களின் இந்த பெயருக்கு எலி உண்பவர் என்று அர்த்தம். இவர்களுக்கு வீடுகளோ, நிலங்களோ கிடையாது. மஹா தலித் என்றறியப்படும் இம்மக்கள் மிகவும் ஏழ்மையிலுள்ளவர்கள்.

**இம்மொழி பேசும் மக்கள் மத்தியில் சுவிசேஷப்பணி:**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக இவர்கள் மத்தியில் 2014ம் ஆண்டு ஊழியங்கள் துவங்கப்பட்டன. தற்போது அராரியா, சுப்போல் மற்றும் ராணிகஞ்ச் பகுதிகளில் செய்யப்பட்டு வரும் ஊழியங்களின் விளைவாக சில குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### ஜெபிக்க:

01.முஷாஹர் இன மக்களின் ஏழ்மை ஒழியவும், அவர்களின் அடிப்படை தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

02.முஷாஹர் இன மக்கள் மத்தியில் தேவன் ஒரு பெரும் மனமாற்றத்தை தரவும், தேத்தி மொழி பேசும் அனைவரும் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

03.தேத்தி விசுவாசிகளின் மத்தியிலிருந்து ஊழியர்கள் எழும்ப ஜெபிப்போம்.

04.இம்மக்கள் மத்தியில் ஊழியங்கள் பெருகவும், ஆவியானவர் தாமே தமது வார்த்தையை அனுப்பி அடையாளங்கள், அற்புதங்களினால் உறுதிப்படுத்தவும் ஜெபிப்போம்.

4ம் வார ஜெபக்குறிப்புகள்




# கொக்கி திரை

என் குழந்தை எப்போது என்னை அம்மா என்று கூப்பிடுவாள் என்று ஒரு தாய் கண்ணீர் வடித்தாள். அந்த சகோதரிக்கு அழகான பெண் குழந்தை. சிறு வயதிலிருந்து எப்போதும் TVமுன் அமர்ந்திருந்தால் ஒரு கால கட்டத்தில் TVயில் ஒளிபரப்பப்படும் Song-யை தெளிவாக பாடுவாள். ஆனால் தன் பெற்றோர் யார் என்று தெரியாமல் சுய நினைவை இழந்து விட்டாள் இது உண்மை யான சம்பவம். அந்த குழந்தை இப்போது இளம் வயதை தொட்டுவிட்டாள். ஆனால் எல்லா அடிப்படை காரியங்களையும் மற்றொருவர் உதவியுடன் மட்டுமே செய்ய முடியும். காரணம் கொக்கி திரை Screen hook. இது போல அநேக உண்மை சம்பவங்களை அன்றாட வாழ்க்கையில் பாக்கிறோம், கேட்கின் றோம். ஆனால் இன்னும் சரியான உணர்வு நம்மில் பலருக்கு வரவில்லை என்று சொன்னால் தவறாகாது. Screen hook என்பது Mobile, TV, Video Game இன்னும் Screen-ஆக கொக்கி போட்டு சிறிய வயதினர் முதல் பெரிய மூதாதையர்கள் வரை அடிமைப்படுத்தி வைத்துள்ளது.

இந்த வாரம் கொக்கி திரை Screen hookக்கு அடிமையாக உள்ள குழந்தைகளுக்காக நாம் பாரத்தோடு ஜெபிப்போம். சிறு பிள்ளைகளை என்னிடத்திற்கு வர இடம் கொடுங்கள் என்று இயேசு கிறிஸ்து கூறினதை அனைவரும் நம் மனதில் பதிய வைக்க வேண்டும். ஏனென்றால் குழந்தைகள் Screenக்கு அடிமையாக காரணம் பெற்றோர் மற்றும் சுற்றத்தார் மட்டுமே. எப்போதும் பெரியவர்கள் TV பார்த்து கொண்டே இருப்பதை அவர்கள் பாக்கின்றனர். அதையே follow பண்றாங்க. காலையில் எழுந்தவுடன் அம்ம ாவை தேடும் குழந்தைகளைவிட Mobile-ல Video பாக்கணும்னுதான் ஆர்வமாக Screen யை தேடுகின்றனர். 2000 ஆண்டுகளுக்கு இல்லாத Dataவை கடந்த 2 வருடங்களில் அறிந்து வைத்துள்ளனர். ஒரு புள்ளி விவரத்தின்படி 80% வீடுகளில் Switch off the TV, Mobile-ல கீழ வை என்கிற சப்தம் எல்லா வீடுகளிலும் விவாதத்துடன் நடைபெறுகிறது என்கின்றனர். பிள்ளைகள் TV, Mobileக்காக பிள்ளைகள் சாப்பிடாமல் பிடிவாதத்தோடு பெற்றோர்களிடம் கோபப்படுகின்றனர். பிள்ளைகள் Parents control-யை விட்டு போய் Screen Controlக்கு வந்துட்டாங்க. Technology பெரியவர்களை manage பண்ணுவது போல குழந்தைகளையும் விட்டுவைக்காமல் Control செய்கிறது. இன்று சபைகளில் என் குழந்தை எப்படியாவது TV, Mobile பாக்கிற பழக்கத்தி லிருந்து விடுபட வேண்டும் என்ற Prayer Points வந்து கொண்டே இருக்கிறது. பிள்ளைகள் Screenல் எதை பார்க்கின்றனரோ அதை Character-ஆக மாறி விடுகின்றனர். TV, Mobile பார்க்கும் போது 10 முறை பேர் சொல்லி சத்தமாக கூப்பிட்டால் கூட காதில் வாங்காத படிக்கு Screen-ல் எல்லா Consentration-யும் செலுத்துகின்றனர். Without TV, Mobile ரொம்ப bore அடிக்கும்னு சொல்கின்றனர். பிள்ளைகளின் happy screen பார்க்கிறது என்கின்றனர். முன்பெல்லாம் ஒரு சிலரே கண்ணாடி (Specs) உபயோகப்படுத்தினார்கள். இன்றைய காலத்தில் 60% பிள்ளைகள் கண்ணாடி அணிகின்றனர். Screenல் பார்ப்பதை வைத்து நாங்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முடியும் என்று சவால் விடுகின்றனர். Screen Addiction-ல் 10% குழந்தைகள் மட்டுமே Knowledge oriented programms பார்க்கின்றனர். அரசு பள்ளி மாணவி Magazine publish செய்கிறாள். இன்னும் சிறு வயதிலேயே அநேக துறைகளில் சாதிக்கின்றனர். 80% குழந்தைகள் மட்டுமே எதிர்கால இலட்சியம் இல்லாமல் Screen addiction- ல் மூழ்கி செய்வதறியாது வாழ்கின்றனர். எப்போது Screen-க்கு bye சொல்லுவார்கள் என்று பெற்றோரின் கண்ணீர் வேதனை புலம்பலை பார்க்கிற நாம் குழந்தைகள் கொக்கி திரை Screen hookல் இருந்து விடுதலை பெற மன்றாடுவோம்.

## ஜெபக்குறிப்புகள்

:

1. TV,Mobile,fb,whasapp போன்ற Screen hook ல் அடிமையாக உள்ள குழந்தைகள் விடுதலை பெற ஜெபிப்போம்.
2. Mobile, TV எங்களுக்கு bore அடிக்குது என்று சொல்லி அவர்கள் படிப்பில் கவனம் செலுத்த ஜெபிப்போம்.
3. தொலைத் தொடர்பு சாதனங்களின் அடிமைத்தனத்தினால் ஏற்படும் பயம் பதட்டம் கவலை கோபம் மன உளைச்சல் எதிர்பார்ப்பு ஏமாற்றம் சமாதானம் அற்ற நிலை வன்முறைகளில் ஈடுபடுதல் நினைவாற்றல் குறைவு இன்னும் பல ஆபத்தான திசையிலிருந்து இளம் வயதினர் பாதுகாக்கக்கட ..
4. பெற்றோர்கள் வேலைப் பணியின் நிமித்தம் Screen முன்பு குழந்தைகளை அமர வைக்காமல் வேறு காரியங்களில் ஈடுபட ஜெபிப்போம்.
5. கிறிஸ்தவ பிள்ளைகள் மற்ற பிள்ளைகள் மத்தியில் சாட்சியாய் வாழ வேத வசனத்தில் வேருன்றி Screenக்கு bye சொல்ல ஜெபிப்போம்.

- Ms.Hepzi

# அருணாச்சல பிரதேசம்

| | |
|---|---|
| தலைநகரம் | : இடா நகர் |
| மக்கள் தொகை | : 13,82,611 |
| மாவட்டங்கள் | : 23 |
| பேசும் மொழிகள் | : சுமார் 30 மொழிகள் |
| கிராமங்கள் | : 5258 |
| எழுத்தறிவு | : 66.95% |

| | |
|---|---|
| ஆளுநர் | : திரு. பி.டி.மிஸ்ரா |
| முதலமைச்சர் | : திரு. பீமா காண்டு (பாஜக) |
| பாராளுமன்ற தொகுதிகள் | : 2 |
| சட்டமன்ற தொகுதிகள் | : 60 |
| கிறிஸ்தவர்கள் | : 30.26% |
| தோற்றுவிக்கப்பட்ட நாள் | : பிப்ரவரி 20, 1987 |

இந்தியாவின் பிறமாநிலங்களிலிருந்து அஸ்ஸாம் வழியாக இம்மாநிலத்திற்குள் செல்வதற்கு சிறப்பு அனுமதி (**Inner line permit**) பெற்றுதான் செல்ல வேண்டும். இம்மாநிலத்தில் வாழும் 101 வகையான மக்கள் இனங்கள் மத்தியில் 37 இனங்கள் ஆவி வணக்கத்தை பின்பற்றுகிறவர்களாகவும், 15 இனத்தை சேர்ந்தவர்கள் இந்து மதத்தையும், 17 இன மக்கள் புத்த மதத்தையும், 23 இனமக்கள் கிறிஸ்தவத்தையும் மற்றும் 8 இன மக்கள் பிற மார்க்கங்களையும் பின்பற்றுகின்றனர். சுமார் 30க்கும் மேற்பட்ட மொழிகள் இம்மாநிலத்தில் பேசப்படுகிறது. மதமாற்றத் தடைச்சட்டம் இம்மாநிலத்தில் 1978ல் ஜனதா ஆட்சியில் கொண்டுவரப்பட்டு 40 ஆண்டுகளாக அமலில் உள்ளது.

**துதிக்க:**

- கடந்த 40 ஆண்டுகளில் இம்மாநிலத்தில் இலட்சக்கணக்கான மக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.
- இம்மாநிலத்திலுள்ள கத்தோலிக்க மற்றும் பாப்டிஸ்ட் திருச்சபைகளின் ஊழியங்கள் மற்றும் சமுதாய சேவைப் பணிகளுக்காக தேவனைத் துதிப்போம்.
- மதமாற்ற தடைச்சட்டம் வாபஸ் பெறப்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:**

- கத்தோலிக்க, பாப்டிஸ்ட் திருச்சபைகளில் எழுப்புதல் ஏற்படவும், இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்க்கவும் ஜெபிப்போம்.
- கிறிஸ்துவை இதுவரை ஏற்றுக்கொள்ளாத மக்கள் இனங்கள் மத்தியில் தேவன் இரங்கி பலத்த கிரியைகளை நடப்பிக்க ஜெபிப்போம்.
- கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம், ஆரோக்கியம் போன்ற எல்லா எல்கைகளிலும் இம்மாநிலம் வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தில் காணப்படும் அரசியல் குழப்பங்கள் தீர்ந்து, ஸ்திரமான, மதசார்பற்ற நடுநிலை ஆட்சி தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தில் ஊழியங்கள் பெருகவும், அநேக ஊழியர்கள் எழும்பவும் ஜெபிப்போம்.
- சீனா, மியான்மர் மற்றும் பூடான் போன்ற நாடுகளின் எல்லைக்கருகில் இருப்பதால் தேவையான பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

- Mrs.Sheela Mary

KTM



# PURPOSE மனிதனின் நோக்கம் OF MAN

தேவனுடைய படைப்பில் முதல் மூன்று நாட்கள் இந்த உலகத்தில் உயிர் வாழுவதற்கான அத்தனை அம்சங்களையும் திரையாக(Screen) சிருஷ்டித்தார். அதன் பின் வரும் மூன்று நாட்களும் அதில் அசையும் காரியங்கள் (Actual actors) யை சிருஷ்டித்தார். அதில் மிக முக்கியமான படைப்பான மனிதனை எத்தனையாவது நாள் படைத்தார் என்பது பலருக்கும் ஒரு கேள்வியாகவே உள்ளது. ஆறாம் நாள் மிருக ஜீவனை படைத்தார். அதே நாளேதான் ஜீவராசிகளுக்கு எல்லாம் மகுடமான மனிதனையும் படைத்தார். மனிதனை உண்டாக்கும் போது, மனிதனை நமது சாயலாகவும், தமது ரூபத்தின் படியேயும் உண்டாக்குவோமாக என்று பிதா, குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன் மனிதனை உண்டாக்கினார்கள்.




மனிதனை இந்த உலகத்தில்
எதற்காக உண்டாக்கினார்?

1. அவரைப் போலாக்க 2. அவரோடு இருக்க
3. அவருக்காக

## 1. அவரைப் போலாக்க (To be like Him):

ஆறாம் நாள் மனிதனைப் படைத்த அதே நாள் அன்றே மிருக ஜீவன்களையும் படைத்தார். ஆனால் மிருகங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் என்னவென்றால் நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம். தேவ சாயல் என்றால் என்ன? இது அவரின் மாம்சீக சரீரத்தை குறிப்பிடவில்லை. ஏனென்றால் அவருக்கு சரீரம் இல்லை. மாறாக அவரின் குண நலனான அன்பு, பெருமை, மன்னிப்பு, தயவு, நற்குணம் போன்றவற்றை கொடுத்து அவரின் மகிமையை நம்மில் விளங்கச் செய்தார் (சங் 8:5) நம்முடைய பேச்சு, ஆற்றல், சுயநிர்ணய உரிமை (Self determination) போன்றவற்றில் தேவ சாயல் காணப்படுகிறது. ஆனாலும் அவரைப்போல் நாம் முழுமையாக இருக்க முடியாது. ஏன் என்றால் அவர் நம்முடைய படைப்பின் நாயகராகும். ஆனால் நாம் அவரை நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பிரதிபலிக்கலாம்.

## 2. அவரோடு இருக்க (To be with Him):

தாம் படைத்த மனிதன் தம்மோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதை தேவன் விரும்பினார். ஆதி 3:8-9 குளிர்ச்சியான வேளையில் தோட்டத்தில் உலாவுகிற தேவாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாா் என்றார். புதிய ஏற்பாட்டிலும் மாற் 3:14 அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு அவர்கள் தம் மோடு கூட இருக்கவும். நம் தேவன் மாறாதவர் அவர் அன்றும் ஒன்றும் இன்று மற்றொன்றும் கூறுகிறவர் அல்ல. என்றுமே மனிதன் தன்னோடு பேசி, நேரத்தை அவர் சமூகத்தில் நாம் களிக்க வேண்டும் என்பதையே விரும்புகிறார். இந்த அவசர மான உலகத்தில் உன்னை உண்டாக்கின தேவனோடு நேரம் செலவிட உனக்கு நேரம் உண்டா? சிந்தித்துப்பார். அவரை துதித்து போற்றுவதற்காகவே நம்மை ஏற்படுத்தியுள்ளார். ஏசா 43:21

## 3. அவருக்காக (For Him)

தேவன் இவ்வுலகில் படைத்த ஒவ்வொருவரைக் குறித்தும் ஒரு நோக்கம் கொண்டுள்ளார். அந்த நோக்கம் நாம் இல்லாமல் நிறைவேறாது அவர்கள் நம்மையல்லாமல் நமக்கென்று முன்னதாக நியமித்தார் (எபி 11:40). கொலோ 1:16 ... சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. இதை உணர்ந்தவர்களாய் தேவனுக்காக நாம் எதை செய்ய வேண்டும் என்பதை நாம் அவர் சமூகத்தில் அமர்ந்து கேட்டறிந்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

தேவன் இப்பூமியை படைத்து, அதில் மனிதனையும் சிருஷ்டித்து .... நீங்கள் பலுகி பெருகி, பூமியை நிரப்பி அதைக் கீழ்படுத்தி... சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுக் கொள்ளுங்கள்... தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி 2:28). இதை வாசிக்கும் அன்பு உள்ளங்களே தேவன் நம்மை ஆளப்படைத்துள்ளார்.நாம் எதற்கும் அடிமையாகி சிக்கிக்கொள்ள வேண்டாம்.

- Mrs.Mercy Selwyn



3rd WEEK MESSAGE

# சிருஷ்டிப்பின் வீழ்ச்சி

- Rev.E.Raja

ஆதாமின் ஜென்ம பாவம் மனித சமுதாயத்திற்குள் சாவுகளைக் கொண்டு வந்தது. மீட்பராகிய தேவன் அநேக பாவங்களை நீக்கினார். பாவத்தை தீவிரப்படுத்தும் திட்டம் முறியடிக்கப்பட்டது. அதேசமயம் புதிய கிருபையானது விசுவாசத்தினால் நாம் இரட்சிப்பைப் பெற கிடைத்த கிருபையாகும். நன்மை பெருகப்பண்ணிற்று (எபேசியர் 1:8) நம்மால் ஒன்றுமில்லை. இது தேவனின் வெகுமதி.

மனிதர்களுக்குள் பரவியிருக்கும் பாவத்திற்கு தக்க தண்டனை உண்டு என்று அநேக வேத வசனங்கள் சொல்கிறது. நமது கொடிய செயல்கள் நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்து விடுகிறது. அவர் கேட்கக் கூடாதபடி நமது பாவங்கள் அவரது செவிகளை அடைத்து முகத்தையும் மறைத்து விடுகிறது (ஏசாயா 59:2). வேதாகமத்தில் ஆக்கினைத்தீர்ப்பு என்ற வார்த்தை சாபம் நியாயத்தீர்ப்பு, தண்டனை, அழிவு மற்றும் தீர்மானம் என்ற பல காரியங்களை விளக்குவதாக சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக ஆக்கினைத் தீர்ப்பின் விளக்கம் என்னவென்றால், தேவசித்தத்திற்கு கீழ்ப்படியாதவர்களும் (மத் 5:22, 23:33, 25:41) மேலும் அவரை மறுதலிக்கிறவர்களும் (மத் 10:33, மாற்கு 16:16, யோவான் 3:18) நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

தேவ கட்டளை எல்லா மனித சமுதாயத்தையும் ஆக்கினைக்குட்படுத்துவதால் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொள்வோம். ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோமர் 8:1,2)

### தேவனின் நியாயத்தீர்ப்பு:

தேவன் பூமியைப் பார்த்தார். இதோ அது சீர்கெட்டதாயிருந்தது. பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி, மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது. அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது. நான் அவர்களை பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன் (ஆதி 6:12,13). தேவன் நோவாவிடம் ஒரு பேழையைக் கட்டச் சொன்னார். அதில் நோவாவின் குடும்பத்தார்களோடு சுத்தமான சகல மிருகங்களில் ஒருஜோடும், சுத்தமில்லாத மிருகங்களில் ஒரு ஜோடும் சேர்த்துக் கொள்ளச் சொன்னார். பின்பு நாற்பது நாள் இரவும் பகலும் மழை பெய்து பெரும் வெள்ளம் உண்டாயிற்று. நோவாவும் அவன் குடும்பத்தாரும் தேவன் கட்டளையிட்டப்படி சேர்க்கப்பட்ட மிருகங்களும் பேழையில் ஏறி தப்பினார்கள். பூமியின் மீதுள்ள அனைத்து ஜீவ ஜந்துக்களும் மனிதர்களும் அழிந்து போயின. வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின. மனுஷர் முதல் மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப்பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயின. நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன. ஜலம் பூமியின் மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்து கொண்டிருந்தது (ஆதி 7:21-23).

தேவனை வேதனைப்படுத்தும் அளவுக்கு ஆதி மனித சமுதாயத்தில் பாவங்கள் பெருகிப்போனதால் தேவன் இந்த அழிவைக் கட்டளையிட்டார் என்று வேதம் தெளிவாக விளக்குகிறது. நியாயத்தீர்ப்பு வேண்டும் என்றளவுக்கு மனித சமுதாயத்தின் பாவங்கள் பெருகிவிட்டது என்பதை வேத வசனங்கள் அழுத்தமாக விவரிக்கிறது. அவைகள் பாவத்தை மட்டுமல்லாமல் பாவத்தின் தொடர்ச்சியையும் விளக்குகிறது. எதைக்குறித்தும் வெட்கப்படாமலும் தேவ பிரசன்னத்தை விரும்பாமலும் இருந்தார்கள். ஆதி 6:5 ஆம் வசனத்தை ஆதி 1:31 உடனும், அதே ஆதி 6:5 ஆம் வசனத்தை ஆதி 1:4 உடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தேவன் முதலில் எல்லாம் நல்லது என்று கண்டார். பின்பு எல்லாம் கெட்டது என்று கண்டார் என்று அறிந்து கொள்ளலாம்.

### நியாயத்தீர்ப்புக்கான காரணங்கள்:

1. வாழ்க்கை ஓட்டத்தில் தூய்மைக்கேடு (ஆதி 6:2)
2. இராட்சதர்களின் ஆதிக்கம் (வசனம் 4)
3. அக்கிரமத்தின் பெருக்கம் (வசனம் 5)
4. கொடுமை (வசனம் 11)

தேவனோடிருந்தவர்களுக்கும் தேவனோடில்லாதர்களுக்கும் வித்தியாசம் இருந்தது. இதற்கு அடையாளம் நோவாவும் அவன் குடும்பத்தார்களும் (ஆதி 6:9) நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி எல்லாம் செய்து முடித்தான். எனவே தேவன் நோவாவின் குடும்பத்தை பாதுகாத்தார். தேவன் அவருக்குப் பயந்து நடந்த நோவாவோடு ஒரு உடன்படிக்கை செய்து இந்த முழு உலகத்தையும் ஆசீர்வதித்தார்.

### வருங்கால நியாயத்தீர்ப்பு:

தேவன் தம் வருகைக்கும் தேவ ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும் முன்பு உலகம் எப்படி இருந்தது என்பதற்கு உதாரணமாக இதை பயன்படுத்தியுள்ளார். ஆனால் நோவாவின் காலத்திலிருந்தது போல தேவகுமாரனின் வருகைக்கு முன்பும் நடக்கும் என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு 24:37-39).

### தேவனின் மீட்பின் திட்டம்:

தேவனின் மீட்பின் திட்டம் ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பித்து விட்டது. தேவன் மனித சமுதாயத்தை இரட்சிக்க எடுத்த முதல் படி ஆதி 3:15 உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய். தேவன் தமது ஒரேபேரான குமாரன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார்: யோவான் 1:14ல் சொல்லப்பட்டது. அந்த வார்த்தை மாம்சமாகி.... நமக்குள்ளே வாசம்பண்ணினார். தேவன் மனிதனானது பண்பின் திரு உருவம் (அவதாரம்) ஆகும். நித்திய தேவன் மாம்சமும் இரத்தமும் உடைய மனிதனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவரே இயேசு கிறிஸ்து. அவர் சாதாரண மனிதர்களைப்போல பாடுகளையும் கஷ்டங்களையும் அனுபவித்தவராக இப்பூவுலகில் வாழ்ந்தார். இப்பூவுலகில் அவர் ஒருவர் மட்டுமே பாவம் இல்லாதவராய் பரிசுத்தமாய் வாழ்ந்தார். கிறிஸ்து நமக்காக மரிக்கும்படி, சதையும் இரத்தமும் நிறைந்த உடம்புடன் மனித உருவெடுத்து வந்தார். அவரது பரிசுத்தமான, பாவமற்ற வாழ்க்கை மூலம் நமக்கு மீட்பைக் கொடுக்கும் தகுதியை சிலுவையில் பெற்றார்.

### நம்மை மீட்கும்படி இயேசு சிலுவையில் மரித்தது:

இயேசு நமது பாவங்களுக்காக மரிக்கும்படி வந்தார். யோவான் 1:29ல் "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" என்று யோவான் தீர்க்கத்தரிசி கூறினார். தேவன் நமக்காக தம்மையே தியாக பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 1:7,8). அவர் நமது பாவங்களுக்காக தியாக பலியாக வந்தார். அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார் (யோவா 1:12)

### இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்:

கிறிஸ்துவின் மரணம் மீட்பை நிறைவேற்றியது. ஆனால் மீட்பின் மரணம் கதையின் முடிவல்ல. இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். ஆகவேதான் முதல் மனிதன் ஆதாம் வாழும் ஆத்துமாவானான். கடைசி ஆதாம் ஜீவனைக் கொடுக்கும் ஆவியானவரானார் என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. அவர் இன்றும் ஜீவிக்கிற தேவன். நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு மனம் திரும்பினால், நம்முடைய பாவங்களை மன்னித்து அவருடைய குமாரர்களாக்குவார். நமது மறுபிறப்பினால் நாம் தேவனின் வாழ்க்கை மூலம் தேவ பிள்ளைகளாக மாறுவோம்.

### சிந்திக்க வேண்டிய காரியங்கள்:

1. ஆதி மனிதனின் பாவத்தால் நாம் பாவச் சூழ்நிலையிலிருக்கிறோம்.
2. பாவச் சூழ்நிலை ஒருபோதும் நம்மை பரலோகத்திற்கு வழிகாட்டாது. எனவே நல்ல மனிதர்களாக வாழ முயற்சிப்போம்.
3. தேவன் மனிதனை தன் ஜீவனால் நிறைத்தார். இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்த பரம பிதா தன்னைத்தாழ்த்தி பாலகனாய் இப்பூவுலகில் பிறந்து, மனித சமுதாயத்தை மீட்பதற்காக மரித்தார். (1 கொரி 15:45)

இனிய சந்திப்பு

COFFEE WITH EVE



# ஏவாள்

நாவு நரம்பில்லாதது... அது ஆயுள் சக்கரத்தை சுட்டெரிக்கும். நன்றி கெட்ட வார்த்தைகளை வீசும் நாவு தீ போன்றது. நாவினால் வீழ்ந்தவர்கள் பலர் உள்ளனர். அப்படிப்பட்ட ஒருவரை தான் நாம் சந்திக்க உள்ளோம். நமது ஆதித்தாய் ஏவாள் அவர்கள். வாருங்கள் சந்தித்து பேசுவோம்.

கேரீத் பேட்டியாளர்: வணக்கம்! அம்மா!

ஏவாள்: வணக்கம்!!

கேரீத் பேட்டியாளர்: அம்மா உங்களை பார்க்க ரொம்பவே ஆர்வமாயிருந்தேன். பெண்மையின் முதலாம் படைப்பு நீங்க. இந்த உலகத்தில எத்தனை உலக அழகிகள் பிறந்தாலும் உங்க அழகோடு ஈடு கொடுக்க முடியாது. நான் வியந்து போனேன்.

ஏவாள்: (நகைக்கிறாள்) சும்மாவா! ஆண்டவர் அவர் கரத்தினால் பார்த்து, பார்த்து உருவாக்கினார். அவர் படைப்புகள் எல்லாமே ஆச்சரியமும், அதிசயமும் தானே!

கேரீத் பேட்டியாளர்: கொஞ்சம் சொல்லுங்கம்மா.... நீங்க பார்த்த அந்த ஏதேன் தோட்டம் எப்படி இருந்தது? நீங்க அங்க எப்படி Feel பண்ணினீங்க.

ஏவாள்: ஒழுங்கும் பூரணமுமாக ஆண்டவர் சிருஷ்டித்திருந்தார். அந்த பரிபூரணத்தினால் நாங்க ஆசீர்வதிக்கப்பட்டு இருந்தோம். தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட எங்கள் சரீரத்தில், வியாதியோ, வேதனையோ, அழிவை கொண்டுவரும் மரணமோ கிடையாது. ஆரோக்கியத்தை கொடுக்கும் நல மான உணவு எங்கள் கைகளில் பறிக்கும் தூரத்தில் இருந்தது. சீதோஷண நிலையை தாங்க எங்களுக்கு உடை தேவைப்படல. மிருகங்களை கண்டு அஞ்ச தேவையில்லை. எங்களை ஒளித்துக்கொள்ளவோ, பயப்படவோ எந்த சூழ்நிலையும் இல்லை. அங்கு இருந்த நாளெல்லாம் மகிழ்ச்சியாய் இருந்தது.

கேரீத் பேட்டியாளர்: ஆனால் தனிமையை நீங்க உணரலையா?

ஏவாள்: எங்களுக்கு தனிமை என்பதே என்னவென்று தெரியாது! உற்றத்துணையாய் தொடர்ந்து அன்பினை செலுத்த ஆதாம் இருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேல் சிருஷ்டிக்கர்த்தாவாகிய தேவனை முகமுகமாய் சந்தித்து பேசும் வாய்ப்பும் இருந்தது.

கேரீத் பேட்டியாளர்: சரி! இப்படி ஆண்டவர் ஆதாம், ஆரோக்கியம், அழகு, எல்லாம் இருந்தபோதும் பரிபூரண மாக Feel பண்ணியிருப்பீங்க. பிறகு எப்படி பிசாசு உங்களை வஞ்சித்தான்.

ஏவாள்: பெண்களுக்கு பிறவியிலேயே உள்ள ஒரு குணம் உண்டு. அதை விட இது அழகாய் இருக்கு, இதைவிட அது ருசியாய் இருக்கு. நானும் ஆதாமும் தோட்டத்தில் பழங்களை பறித்து புசித்து பார்த்தோம். கோடிக்கணக்கான varitey பழங்கள் ஒன்றை விட ஒன்று Taste-ஆ யிருக்கும். நான் புசிக்கிறதை அவருக்கு அறிமுகம் செய்வேன். அவர் தெரிந்து கொண்டதை எனக்கு சொல்லுவார். என்னோட இந்த குணத்தை சரியாக கவனித்திருந்த சாத்தான் என்னை வஞ்சித்து விட்டான்.

கேரீத் பேட்டியாளர்: இந்த திருப்தியின்மையை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். "இதைவிட அது நல்லது என்று மற்றொன்றை இச்சிக்கும் ஆசை இன்றும் பல பெண்களை அழிவுக்கு நேராக வழிநடத்துது". தன் கணவனை விட மற்றவனை Better என்று யோசித்து, அதற்காக ஒரு பாவமும் செய்யாத தான் பெற்ற குழந்தையையே கொன்று போட துணிஞ்சிடுறாங்க.

ஏவாள்: ஆமாம்! வீண் பேச்சுகளுக்கும், வெட்டி நியாயங்களுக்கும் நான் மட்டும் செவிகொடுக்காமல் போயிருந்தால் இந்த பிரச்சனையே இருந்திருக்காது. அந்த தந்திரமான குரலுக்கு எச்சரிக்கையாயிருந்திருந்தால் இந்த பிரச்சனை வந்திருக்காது.

கேரீத் பேட்டியாளர்: இன்றைய காலத்துல கூட அப்படி தான். நிறைய பெண்கள் Facebook, Whatsapp, Instagram, Tiktok அறிமுகம் இல்லாத நபர்களை சந்தித்து அவங்களோட அரவணைப்பான, அக்கரையான உரையாடல்களில் மயங்கி தன்னோட வாழ்க்கையை தொலைத்திடுறாங்க.

ஏவாள்: நான் ஆண்டவருடைய ஆலோசனையை அறிந்து சரியானதை தெரிந்தெடுக்கும் முதிர்ச்சி எனக்கு இல்லாம போயிடுச்சு. நான் என்னை இவ்வளவு அழகாக படைத்த ஆண்டவரை விட, அந்த புது நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்துட்டேன்.

கேரீத் பேட்டியாளர்: கிறிஸ்துவை விட்டு பின்வாங்கி போகிற அநேக கிறிஸ்தவ வாலிபர்களுடைய நிலையும் இப்படி தான் இருக்கு. வேதத்தை வாசிக்கவோ, ஜெபித்து தேவனோடு உரையாடவோ மறந்து திடீரென கிடைத்த புது நட்பில்(காதல்) மணிக்கணக்காக அப்பறம்.... நீ சொல்லு என்று ஒன்றுமில் லாமல் தொடங்கும் போன் உரையாடல் பல தீர்க்க முடியாத சிக்கலையே அவர்களுக்கு தருது.

அன்பான வாசகர்களே! எல்லா ஆசீர்வாதமும் இருந்தும் திருப்தியின்மை என்ற சிறிய ஆயுதத்தை கொண்டு சாத்தான் ஏவாளையும், ஆதாமையும் அழகிய ஏதேனிலிருந்து வெளியேற்றினான். ஏவாளிடம் இல்லாத மனரம்மியம் எல்லா மனிதரையும் பாவிகளாக்கி, தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே பெரும் பிரிவை உண்டாக்கியது. அந்த பிரிவை இணைக்கவே கிறிஸ்து பாலமாக செயல்பட்டார். ஏவாளை வஞ்சித்த அதே குரல் நம்மை கிறிஸ்துவை விட்டு விலகும் படி, கெடுக்குமோ என்று பவுல் அஞ்சுகிறார் (2 கொரி 11:3). ஆகவே! தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றி திரிகிறான் (1 பேதுரு 5:8).

-Mrs.Aniya




நாம் ஒவ்வொருவரும் பல ஆண்டுகளை கழித்து வருகிறோம். ஒரு புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்கும் போது, பல உணர்வுகள் நமக்கு ஏற்படுகிறது.மாறிவரும் காலத்தில், நாம் இருக்கிறோம். நம்பிக்கையற்ற காலங்களில் இருக்கிறோம். எல்லா காலமும் நமக்கு குழப்பமாயிருக்கிறது.இருந்தாலும் பரவாயில்லை. இன்னும் ஒரு வருடம் வந்துவிட்டது என மகிழ்ச்சியடைகிறோம். அந்த நாளை புதிய வருடப்பண்டிகையாக கொண்டாடுகிறோம். உதாரணம்: ஒரு பெண் வாழ்க்கையில் பல தொல்லைகளில் அவதியுற்று கவலையோடு கைரேகை பார்க்க போனாள். கைரேகைகாரனிடம் எல்லாம் எனக்கு மோசமாய் போய்க்கொண்டிருக்கிறது.என் கணவர் இன்னொருத்தியோடு சுற்றித்திரிகிறார்.என் மகள் உதவாத ஒருவனோடு ஓடிவிட்டாள்.என் மிருக ஜீவன்கள் அழிந்துவிட்டன.இனி என்ன நடக்கும்? என் எதிர்காலம் என்ன என்று கேட்டாள். ஜோசியம் பார்த்தவன் கையைப்பார்த்து சொன்னான் உன் கணவனின் வேலை போய்விடும்.உன்னை விவாகரத்து செய்து விடுவான்.சில நாட்களில் நீ குடிக்க ஆரம்பித்துவிடுவாய். உன் நண்பர்கள், உறவினர்கள் உன்னை கைவிட்டுவிடுவார்கள்.யாரும் உன்னோடு பேச மாட்டார்கள் என்று சொல்லிக் கொண்டே இருந்தான். அவள் ஓ.. என்று கத்தினாள்.. பிறகு என்னவாகும்? என்றாள்.அவன் அதே உனக்கு பழக்கமாகிவிடும் என்றான். அநேகருடைய வாழ்க்கையில் அவர்களது பிரச்சனைகள் இப்படி பழக்கமாகி விடுகிறது.சிலருக்கு தீய பழக்கவழக்கங்கள் அதே பழக்கமாகிவிடுகிறது. சிலருக்கு சில சம்ரதாயங்கள், ஆச்சாரங்கள், சடங்குகள் அதே பழக்கமாகிவிடுகிறது. தோல்விகள் கண்டாலும், ஏமாற்றங்கள் ஏற்பட்டாலும் அதையே பற்றிக்கொண்டிருக்கிறார்கள், அங்கலாய்ப்பார்கள் ஆனால் விடமாட்டார்கள். வேத புருஷர் தங்கள் அனுபவங்களை சொல்லுகிறார்கள்.

1. எகிப்து தேசத்திலும், கானான் தேசத்திலுமுள்ள பணம் செலவழிந்த போது எகிப்தியர் எல்லாரும் யோசேப்பினிடத்தில் வந்து எங்களுக்கு ஆகாரம் தாரும் பணமில்லை. அதினால் நாங்கள் உமது சமூகத்தில் சாக வேண்டுமோ என்றார்கள் (ஆதி 47:15). கானானிலும் எகிப்திலும் பணமில்லாமல் போனது என்று கூக்குரல் எழப்படுகிறது. இதே குரல் இன்றும் பல இடங்களில் கேட்கப்படுகிறது.

2. என் பந்து ஜனங்கள் விலகிப்போனர்கள். என் சிநேகிதர்கள் என்னை மறந்து விட்டார்கள் என யோபு குறிப்பிடுகிறான் (யோபு 19:14). நம்மிடம் பணம், பொருள், பதவி, நமக்கு நல்ல அந்தஸ்து இருந்தால் நம்மை சுற்றி ஏராளமானோர் இருக்கிறார்கள். இல்லையேல் எல்லோரும் நம்மை விட்டு போய்விடுகிறார்கள் என்பது வேத புருஷர் அனுபவம். நமது அனுபவம் கூட இது தானே?

3. என் மாம்சமும், என் இருதயமும் மாண்டு போகிறது என்றான் சங்கீதக்காரன் (சங் 73:26). நமது சொந்த சரீரமும் கூட நமக்கு அநேக நேரங்களில் உதவியாய் இல்லாமல் போகிறது. Dr. Stanley Jones says, “While we can see that our ways wont work still we hesitate to take Gods way” என்கிறார். “நமது வழிகள் முயற்சிகள் நமக்கு சரிப்படவில்லை என்றாலும், ஆண்டவரின் வழியில் செல்வதற்கு தயங்குகிறோம். என்பது அவரின் கூற்று” ஆனால் தாவீது தன் காலங்கள் ஆண்டவரின் கரங்களில் இருக்கிறது என்கிறான் (சங் 31:15). காரணம் என்னவென்றால்

## 1. நீட்டிய கரம் Stretched hand - Stretched hand denotes to show mercy

காலங்களை அறிந்தவர் கரம் நீட்டி அழைக்கிறார். அவரது கரம் நம்மை உண்டாக்கியது (சங் 119:73). இஸ்ரவேலை தமது புயபலத்தினால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்படப்பண்ணியது. அது நீதியின் கரம், அது இரட்சிக்கக்கூடாதபடி குறுகிய கரமல்ல (ஏசா 59:1). குருடரை, சப்பாணிகளை, குஷ்டரோகிகளை தொட்டகரம், பாடையை தொட்டு மரித்தவனை உயிரோடு எழுப்பிய கரம், ஆணிகளால் கடாவப்பட்ட கரம், அன்பின் கரம் நம்மை பழைய ஆண்டிலிருந்து நீட்டி புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்க அழைக்கிறது. (எ.கா) சிறுவர்களுக்கான ஓட்டப்பந்தயம் ஒன்று நடந்தது. குழந்தைகள் ஓட்டத்திற்கு ஆயத்தமாய் நின்றனர். இருபக்கமும் ஏராளமான மக்கள் ஆரவாரக் கூட்டம். ஓட்டம் ஆரம்பிக்கிறது. எல்லா குழந்தைகளும் ஓடுகிறார்கள். சில குழந்தைகள் விழுந்து விடுகிறார்கள். ஓடமுடியவில்லை. சில குழந்தைகளுக்கு பயம், அழுகை எனவே நின்று விடுகிறார்கள். சில குழந்தைகள் தட்டி முட்டி ஓடுகிறது. ஒரு குழந்தை வேகமாக ஓடி வெற்றிப்பெற்றது. எப்படி உன்னால் முடிந்தது என்று கேட்டனர். என் தாய் எனக்கு முன்னால் நின்று கொண்டு இருகரம் நீட்டி அழைத்தவண்ணம் இருந்தார்கள். தாயின் கரத்தை நோக்கி, ஓடினேன் என்றது. நமக்கும் இயேசுவின் கரம் நீட்டப்பட்டகரம் புதிய ஆண்டில் முன்னால் நிற்கிறது ஓடுவோமா.

## 2.உடன்படிக்கையின் கரம்: Covenant hand - Covenant hand denotes an agreement

கர்த்தராகிய நான் நீதியின் படி உம்மை அழைத்து உம்முடைய கையைப்பிடித்து உம்மை தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன் என்றார் (ஏசா 42:7) நாம் உடன்படிக்கை செய்தால் கையோடு கைபோடவேண்டும். யெகூ இஸ்ரவேலின் தலைவன் ஆகாபின் பிள்ளைகளை கொன்று போட்டவன். வழியில் ரேகாபின் குமாரனாகிய யோனத்தானை சந்திக்கிறான். உமது இருதயம் செம்மையாய் இருக்கிறதா? என்று கேட்கிறான். அதற்கு யோனாத்தான் அப்படியே இருக்கிறது என்றான். அப்படியானால் உன் கையை தா என நீட்டி, தன் ரதத்தில் ஏற்றினான். கையோடு கைபோட்டு உடன்பாடு செய்து கொள்கிறான் (2 இராஜா 10:15) கடவுளும் நம்மை பார்த்து கூறுவது, உன்னை அழைத்தேன். உன்னுடனே இருக்கிறேன். உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்கிறார். Lord helpme to remember that nothing is going to happen to me today that you and I together can’t handle இயேசு சொல்வது என்னையல்லாமல் உன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றார். நாம் உடன்படிக்கையின் மக்கள் அவரோடு கைசேர்ப்போம். கையோடு கை சேர்த்தால் தண்டனைக்கு தப்புவோம் (நீதி 11:21).

## 3.சுட்டிக்காட்டும் கரம்: Pointing hand - Pointing hand denotes aim and purpose

உன்னை ஜாதிகளுக்கு ஒளியாக வைப்பேன் என்று இஸ்ரவேலருக்கு நோக்கத்தையும், இலட்சியத்தையும் கடவுள் சுட்டிக்காட்டுகின்றார். 1636ல் A Group puritans (ஒழுக்க நெறியாளர்கள்) Founded Harward University. Their aim and motto is Christ Ecclesiae-for Christ and the Church கடவுளையும் கிறிஸ்துவையும் அறிவது தான் கிறிஸ்தவரின் நோக்கம் என யோவான் எழுதுகிறார் (யோவான் 17:3). எந்த ஒரு இலட்சியமும் இல்லாமல் வாழ்பவர் ஏராளம். பவுல் தனது இலக்கை நோக்கி வாழ்க்கையை தொடர்வதாக சொல்லுகிறார் (பிலி 3:8-11). இலட்சியங்களை வகுத்து பாடுபட்டவர்கள் உலகில் சாதனைகளை புரிந்துள்ளார்கள். உதாரணமாக லெனின் மூச்சும், பேச்சும் புரட்சி என்றார். சோவியத் ஐக்கிய நாட்டை உருவாக்கும் சிற்பியானார். அதன் பலாபலன் என்ன என்பதல்ல வரலாற்றில் குறிப்பிடும்படி புரட்சி செய்தார். ஒவ்வொருவருக்கும் எதிரே நோக்கமும், இலட்சியமும் இருக்கிறது. கர்த்தர் உங்களுக்கு முன்னே போகிறார். இஸ்ரவேலின் தேவன் உங்கள் பின்னாலே உங்களை காக்கிறவராயிருக்கிறார் என்கிறது திருமறை. கடவுளின் நோக்கம் எதாவது ஒன்று உன்னில் நிறைவேறுமா தைரியமாய் புறப்பட்டுபோ அவர் உன்னோடு இருக்கிறார்.

- KTM



# காயீன்

அன்பு வாசகர்களே!! நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய வருடத்தில் தேவன் நமக்கு தம்முடைய வேதத்தில் உள்ள பாத்திரங்களைக் கொண்டு நம்மை போதித்து நடத்துவாராக!! காயீன் ஆபேல் கதையை யாரும் தெரியாது என்று கூற முடியாது.சரி வாங்க நம்ம காயீனிடமிருந்து ஆழமான சத்தியங்களை கற்றுக்கொள்வோம்.

**காயீனின் முகநாடி வேறுபட்டது:(ஆதி 4:5)**

காயீனின் காணிக்கையை தேவன் ஏற்றுக்கொள்ளாததால் அவனுக்கு மிகுந்த எரிச்சல் வந்து, அவன் முகநாடி வேறுபட்டது என்று வேதம் கூறுகிறது. நாம் சிறுவயதில் காயீனின் அழுகிய காய்கறிகளே தேவன் அவன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளாததற்கு காரணம் என்று நினைத்தோம். ஆனால் 1 யோவா 3:12ல் அவனது கிரியைகள் பொல்லாதவைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தான் நல்லவன் அல்லாததினால் தேவன் அவன் காணிக்கையை ஏற்கவில்லை என்று உணர்ந்த காயீன் கோபம் கொண்டு தன் சொந்த சகோதரனை கொன்றான்.

என் சகோதரனுக்கு நான் காவலாளியோ? (ஆதி 4:9) என்ன ஒரு துணிச்சலான பதில்!! இங்கு நன்றாக கவனிக்க வேண்டியது அவனது அன்பின்மையும் பொய்யும்தான்! துளி கூட பாசமற்றவனாக, ஒரே கருவறையிலிருந்து வெளிவந்த தன் சொந்த சகோதரனின் உயிரை ரத்தம் சொட்ட சொட்ட வாங்கி விட்டு, தன்னை படைத்த தேவனிடம் பொய் சொன்னான் சேஷ்டபுத்திரனான காயீன். இன்றும் கூட நம் சொந்த சகோதரனையோ, சகோதரியையோ நாம் கண்டு கொள்வதே இல்லை. என் வாழ்க்கை, என்படிப்பு, என் முன்னேற்றம் என்று தான் பல வேளைகளில் சிந்திக்கிறோம் நினைவில் கொள்ளுங்கள். நீங்களெல்லாரும் ஒரே செடியில் பூத்த மலர்கள்!! உன் சகோதரனுக்கோ, சகோதரிக்கோ ஏதாவது ஒன்று என்றால் முதலில் கவனிக்க வேண்டியது நீ தான். அவர்கள் கெட்ட வழியில் சென்றால் அவர்களை அதிலிருந்து கொண்டுவர முயற்சி செய்யனும். அவர்களுக்காக ஜெபிக்க வேண்டியது உன்னுடைய கடமையே!! அவர்கள் தங்கள் வாழ்வில், படிப்பில் வேலையில் உயர்ந்தால் அவர்களை முதலில் பாராட்டி, உற்சாகப்படுத்துவது உன் வேலையே, அதற்கு பதிலாக பொறாமை கொண்டாலோ அவர்களைப் பற்றி மற்றவர்களிடம் குறை கூறினாலோ, காயீனைப் போல எனக்கென்ன என்று இருந்தாலோ? நீ தேவனால் உண்டானவன் அல்ல? (1 யோவா 3:10)

**தன் சகோதரனை கொலைசெய்த காயீனைப்போல் இருக்க வேண்டாம் (1 யோவா 3:12)**

வேதமே இச்சொற்றொடரை கூறுகிறது!! அவன் தன் செய்கையினாலே இப்படியொரு மோசமான எடுத்துக்காட்டாய் சித்தரிக்கப்படுகிறான். தன் சந்ததியாருக்கும் ஓர் தவறான வழிகாட்டியாய் அமைந்துவிட்டான். லாமேக்கு 2 கொலைகளைச் செய்து, தன் மூதாதையரான காயீனை ஒப்பிட்டு தன் தவறுக்கு சாக்குபோக்கு சொல்லி தப்பிக்க முயல்கிறான் (ஆதி 4: 23) காயீன் கொலையை விதைத்தான். அவன் சந்ததியாரும் கொலைகளையே செய்தார்கள். இன்றும் கூட காயீனைப்பற்றி படிக்கிற நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போம். நம்மையே ஆராய்ந்துப் பார்த்து, இக்கேள்விகளுக்கு பதில் அளிப்போம்.

1. அன்பற்ற சகோதரனாக காயீனைப்போல இருக்க போகிறேனா? அல்லது தீங்கு செய்த தன் சகோதரர்களை மன்னித்து, அவர்கள் உயிரைக் காப்பாற்றிய யோசேப்பைப் போல இருக்க போகிறேனா?
2. நான் தேவனால் உண்டானவனா? (அ) பொல்லாங்கனான சாத்தானால் உண்டானவனா?
3. சகோதர அன்பை காண அரிதான இச்சமுதாயத்தில், தேவ அன்பை காண்பிக்கும் ஒரு சகோதரனாக (அ) சகோதரியாக இருக்க போகிறாயா? (அ) உலத்தாரைப் போல் தவறுகளை மன்னியாது சண்டையிட்டு கொண்டு இருக்க போகிறாயா?

**முக்கிய குறிப்புகள்:**

வேதத்தில், உலகத்தில் முதலில் குழந்தையாக பிறந்தவன்.
முதல் கொலை செய்தவன்
தந்தை: ஆதாம் தாய்: ஏவாள்
சகோதரர்கள்: ஆபேல், சேத் மற்றும் பல
வேலை: விவசாயம்
இடம்: ஏதேன் தோட்டத்தின் அருகில்

**முக்கிய வசனம்:** தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? (1 யோவா 4:20)

காயீனைக் குறித்து ஆதி 4:1-23, 1 யோவா 3:12, எபி 11:4, யூதா 11 ஆகிய இடங்களில் வாசிக்கலாம்.

- Mrs.Jeba Tyson



4TH WEEK MESSAGE

(ஆதியாகமம் 10,11)

# சிருஷ்டிப்பின் குழப்பம்



தேவன் குழப்பத்திற்கல்ல, சமாதானத்தின் காரணர். பாபேல் கோபுரத்தைக் கட்டி நமக்கு பெருமை சேர்ப்போம் என்று மக்கள் தேவனை மறந்து சுய பெருமைக்காக செய்ய எத்தனித்தல், அவர்களின் தவறான சிந்தனையையும் செயல்பாட்டையும் தடுக்கும் வகையில் தேவன் அவர்கள் பாஷையை தாறு மாறாக்கி பிரிவினையை உண்டாக்கினார். இதை ஆதியாகமம் 11ஆம் அதி காரத்தில் வாசிக்கலாம்.

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்திற்குப்பின் பூமி முழு வதும் ஒரே பாஷையும் ஒரே விதமான பேச்சும் இருந்தது. அவர்கள் தங்கள் சுய பெருமைக்காகவும் தேவனின் ஆட்சியை உடைக்கும்படியாகவும் ஒரு கோபுரத்தைக் கட்ட தீர்மானித்தார்கள். அவர்களின் கூட்டம் ஒரு தவறான கூட்டமாக இருந்தது. சுய பெருமைக்காக தேவ சித்தத்திற்கு எதிராக செயல்பட்டார்கள்.

மனிதர்கள் பூமியில் பெருகின பொழுது, தேவனின் குமாரர்கள், மனிதரின் குமாரர்கள் என்ற வேறுபாடு உண்டாகியது. இந்த வேறுபாட்டினால் இந்த அதிகாரங்களில் நாம் பார்ப்பது. பாபேலில் மனித குமாரர்களின் பாவச்செயல் வசனம் 1:9.

1.அவர்களின் துடுக்கான நோக்கத்தினால் ஒரு நகரத்தையும் ஒரு கோபுரத்தையும் கட்ட நினைத்தது. (வசனம் 1:4)

2.அந்த நோக்கத்தை முறியடிக்கும் வகையில் அவர்களின் பாஷைகளை தாறுமாறாக்கி அவர்களுக்குள் பிரிவினையை உண்டாக்கிய தேவனின் நியாயத்தீர்ப்பு (வசனம் 5:9)

3. தேவ குமாரனிடமிருந்து ஆபிரகாம் வரை வந்த மரபு வழி (வசனம் 10:26) ஆபிரகாமின் குடும்பத்தின் பொதுவான கணக்கும், சொந்த நாட்டிலிருந்து வெளியேறுதலும் (வசனம் 27:32)

## விளைவுகள்/முக்கியத்துவம்:

1. பூமி முழுவதும் ஒரே விசுவாசத்தையும், உண்மை தேவனின் ஞானத்தையும் எடுத்துச் செல்லுதல்.

2.உலகமுழுவதிலும் உள்ள எல்லா இடங்களிலும் தேவன் மனிதனை நிரம்பச்செய்தார்.

3. தேவன் ஆபிரகாமை தெரிந்து கொண்டபின் தமது சித்தத்தின்படி பூமியில் சமாதானத்தைக் கட்டளையிட்டு மக்களை வழிநடத்தினார்.

ஆபிரகாம் 11:1-9 வசனங்களின் மூலம் நாம் தெரிந்து கொள்வது, எப்படி மனிதர்கள் எத்தனை தடவை தேவனின் கட்டளைகளை விட்டுவிட்டு தங்கள் சுயசித்தத்தின்படி திரிந்தார்கள் என்றும், சிநேயார் தேசத்தில் தங்கள் சுய பெருமைக்காகவும், பேர் பிரஸ்தாபத்திற்காகவும் ஒரு நகரத்தையும் கோபுரத்தையும் கட்ட தீர்மானித்தார்கள் என்றும் பார்க்கலாம். அவர்களின் முக்கியமான நோக்கம் பரலோகத்தை அடைய வேண்டும். தங்களின் சுய சித்தத்தை கடவுளாகக்கருதி வணங்க வேண்டும் என்பதாகும். ஆனால் அவர்களின் சொந்த வடிவம் உண்மை தேவனில்லாமலிருந்தது. ஏதேனிலிருந்து பாபேல் வரை மனிதன் தனது நம்பிக்கையற்ற பெருமை யை இழந்து போனான்.

- Rev.E.Rajan

## சிந்திக்க வேண்டிய காரியங்கள்:

1. பாபேல் கோபுரத்தின் குழப்பம் நமக்கு கற்றுக்கொடுப்பது. நாம் ஒரு திட்டம் போட்டு செயல்பட நினைத்தால் அது தேவ நாமத்தினாலும், அவருடைய பெலத்தினாலும், அவருடைய மகிமைக்காகவும் செயல்படுவதாக இருக்க வேண்டும்.

2. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டம் இருக்கும்.அதை தேவ சித்தத்தின்படி செயல்படுத்தினால் அது சிறந்ததாக அமையும்.

3. மனிதன் ஆவிக்குரியவன். துன்மார்க்கன் கடவுள் இல்லை என்று சொல்லுவான் (சங் 10:4)

4. மனிதன் ஆவிக்குரியவனாக இருந்தாலும் தான் சுயமாய் உருவாக்கியதை தன் சொந்த காரணத்திற்காக வணங்குவான் (சங் 115:4-8)

5. தான் தேவனுக்கும் மேலானவன் என்ற சுய பெருமையின் மேல் இயற்கையாகவே மனிதனுக்கு விருப்பமாகும், சாத்தானைப் போல மனிதன் சுலபமாக ஏமாந்து போகிறான். (ஏசா 14:12-14, ரோமர் 1:20-25)

தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது (1 கொரி 14:33) எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலிப் 4:7) சமாதானம் என்ற வார்த்தை தேவனிடத்தில் இருந்து வரும் அன்பளிப்பு மற்றும் அவரது குணாதிசயங்களுக்கு முழு ஒற்றுமையுள்ள வார்த்தை என்றும் வேதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. (1 தெசலோனிக்கேயர் 5:23, கலா 6:16, 1 பேதுரு 1:2, எபிரே 13:20)

# பரிணாமக் கொள்கையின் விருதாதன்மை



கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பூமி வெறுமையாயும், உருவமற்றதாயும், உயிரினங்களற்றதாயும் இருந்தது. நாம் இன்று காணும் உயிர்வகைகள் அனைத்தும் ஒன்றும் இல்லாமையிலிருந்து வந்தன, என்றார் அறிவியல் ஆசிரியர். வகுப்பில் வேதக்காரன் என அறியப்படும் பத்தாம் வகுப்பு மோசஸ் யோசிக்க ஆரம்பித்தான்,ஆதியிலே பூமி யானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது என்றும், தேவன் ஒன்றும் இல்லாமையிலிருந்து எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்றும் வேதாகமம் கூறுவது இதைத் தானோ? நம்மில் அனேகர் நம்முடைய விசுவாசத்தை முழுவதுமாய் சிதைக்கக் கூடிய இதைப் போன்ற கூற்றுகளைக் கேட்டிருக்கக் கூடும். நான் இன்னும் ஆழமாக பகிர்ந்துகொள்ளும் முன், பரிணாமக் கொள்கையானது கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தான் அரங்கேறியது என்று எச்சரிக்கிறேன். ஆனால், சிருஷ்டிப்பு கொள்கையானது பழங்காலத்திலிருந்தே நன்கு அறியப்பட்டிருந்தது. மோ சே ஆதியாகம புத்தகத்தை பரிணாமக் கொள்கையின் தோற்றத்திற்கு 34 நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதிய போது, உண்மையில் அவர் அது வரை பல காலமாக பாதுகாக்கப்பட்டிருந்த வாய்வழி செய்திகளை பதிவிட்டார்.

15ஆம் நூற்றாண்டுவரை, விசேஷ படைப்புக் கொள்கை பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எல்லா விதமான உயிர்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீகப் பொருளால் அல்லது கடவுளால் உருவாக்கப்பட்டன. அவை அனைத்தும் எவ்வித பெரிய மாற்றங்களும் பெறாமல், உருவாக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கின்றன, என இந்த கொள்கை கூறுகிறது. ஆனால், புதைபடிவங்களில் (fossil) காணப்பட்ட சில உருவ மற்றும் உடற்கூற்று மாற்றங்களின் அடிப்படையில் இந்த கொள்கை தவறு எனக் கருதப்பட்டது. ஏனெனில், பெரிய விலங்குகள் சிறியவைகளாக மாறினதாக சில புதைபடிவங்கள் காண்பித்தன. ஆனால், உண்மையில் இது சிருஷ்டிப்பிற்கே ஒரு சான்றாக உள்ளது. நோவாக் காலத்து வெள்ளத்திற்குப் பின், பூமியை சுற்றியிருந்த நீர்கோளம் இல்லாமல் போயிற்று. இதனால், காற்றழுத்தக் குறைவு, பிராண வாயுவின் குறைவு, புற ஊதாக் கதிரின் அதிகரிப்பு போன்ற பருவநிலை மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்களால் உயிரினங்கள் உருவத்தில் சிறிதாவதும், அவற்றின் வாழ்நாள் குறுகுவதும் ஏற்பட்டன. இது வேதாகம வர்ணனை சரியென உறுதிசெய்கிறது.

சிருஷ்டிப்புக் கொள்கையை எதிர்ப்போருக்கு எதிர்வாதம் அளிக்கும் விதமாக,சில விஞ்ஞானிகள் புதிய சிருஷ்டிப்புக்கொள்கையை முன்மொழிந்தனர். இக்கொள்கையின்படி,இந்த விஞ்ஞானிகள் பழமையான பூமி என்ற ஒரு கருத்தைக் கையாண்டு, கடவுளையும், பரிணாம வளர்ச்சியையும் இணைக்க முயற்சித்தனர். அவர்களுடைய ஒரு சில கருத்துகள்:

ஆதியாகமத்தில் நாள் என்று கூறப்பட்டுள்ளது 24 மணி நேர காலமல்ல, மாறாக அது ஒரு பில்லியன் ஆண்டுகளைப் போன்ற நீண்ட காலம் ஆகும் (நாள்–யுகம் சிருஷ்டிப்புக் கொள்கை).

சொல்லப்பட்ட ஒவ்வொரு 24 மணி நேர ஆறு சிறப்பு நாட்களுக்கு இடையிலும் நீண்டகால இடைவெளி இருந்தது (இடைவெளி சிருஷ்டிப்புக் கொள்கை).

கடவுள் பரிணாம வளர்ச்சியின் மூலமாக பல நூறு மில்லியன் ஆண்டுகளில் எல்லா உயிரினங்களையும் சிருஷ்டித்தார் (வளர்ச்சி சிருஷ்டிப்புக் கொள்கை / இறைப்பொருளால் ஆன பரிணாம வளர்ச்சி).

ஆனால், இவை அனைத்தும் தவறானவை மற்றும் வேதாகமத்திற்கு முற்றிலும் முரணானவை. தாவரங்கள் மூன்றாம் நாளிலும், சூரியன் நான்காம் நாளிலும், பூச்சிகள் ஐந்தாம் நாளிலும் படைக்கப்பட்டதாக வேதாகமம் கூறுகிறது. மேலே கருதப்பட்டபடி, ஒவ்வொரு நாளும் நீண்ட காலங்களைக் குறிக்குமானால், ஒளிசேர்க்கையின்றி தாவரங்கள் மடிந்து போயிருக்கும்.மேலும்,முதல்நிலை மகரந்தகடத்திகளான தேனீக்கள் இல்லாமையால் இனப்பெருக்கமும் நடந்திருக்காது. இரு நாட்களின் தாமதம் தாவரங்களைக் கொல்லாது. ஆனால், நீண்ட கால தாமதங்களோ காலத்திற்கு முன்பே இந்த கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

இரண்டாவதாக, வளர்ச்சி சிருஷ்டிப்புக் கொள்கை சரி என நினைத்தால், மரணங்கள் அதுவும் பல்லாயிரம் மரணங்கள் மனிதன் உருவாகும் முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால், ஆறாம் நாளின் ஈற்றிலே, தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார்; அது மிகவும் நன்றாயிருந்தது என அவர் கண்டதாக ஆதியாகமம் 1:31இல் வாசிக்கிறோம். கடவுள் எல்லாவற்றையும் நலமானதாகக் கண்டார் என்றால், எப்படி அங்கு மரணம் நிகழ்ந்திருக்கக் கூடும்?

1920களில் ஜெ.பி.எஸ். ஹால்டேன் மற்றும் அலெக்ஸாண்டர் ஓபரின் என்பவர்கள் இணைந்து உயிர்களின் தோற்றத்திற்கான நவீன கொள்கையை முன்மொழிந்தனர்.புற ஊதா கதிர் அல்லது மின்னல் போன்ற வெளி ஆற்றலின் தூண்டுதலால்,உயிரணுக்களோடு சம்பந்தமில்லாத ஹைட்ரஜன்,ஆக்ஸிஜன்,அம்மோனியா,மீதேன் போன்றவற்றிலிருந்து,உயிரணுக்களோடு சம்பந்தப்பட்ட கரிம மூலக்கூறுகளை உருவாக்கக் கூடும் என இவர்கள் கூறினார்கள். அதன் பின், ஊரே மற்றும் மில்லர் என்பவர்கள் அந்த இருவரின் கருத்துக்கேற்ற ஆரம்ப கால பூமி என வர்ணிக்கப்பட்ட சூழலில் சில பரிசோதனைகளை நடத்தினர். அதின் மூலம் கிடைத்த திரவத்தில் உயிரணுக்களை அமைக்கும் மூலப்பொருளான அமினோ அமிலம் போன்ற கரிமப் பொருட்கள் இருந்ததாகக் கூறப்பட்டது. உண்மையில் அவர்களுக்கு கிடைத்தவை: 85 சதவீதம் தார், 13 சதவீதம் கார்போஹைட்ரைடுகள் மற்றும் 2 சதவீதம் அமினோ அமிலம். ஹால்டேன் மற்றும் ஓபரினால் சொல்லப்பட்ட ஆரம்ப கால பூமி தாரால் மூடப்பட்டிருந்திருக்க வேண்டும் என இந்த முடிவுகள் அறிவிக்கின்றன! அப்படியானால் அந்த தார் எங்கே மாயமானது? எவ்வாறு இவ்வளவு குறைந்த அமினோ அமிலத்திலிருந்தும், கார்போஹைட்ரைடுகளிலிருந்தும் ஆரம்பநிலை உயிரணுக்கள் உருவாகின? மேலும், அமினோ அமிலம் உருவாக அம்மோனியா மிகவும் அவசியமாகிறது. ஆனால், புற ஊதா கதிர்களால் அம்மோனியா சிதைக்கப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அம்மோனியாவே இல்லை என்றால், எப்படி இந்த வேதிவினைகள் நிகழ்ந்திருக்கக் கூடும்?

ஹால்டேனும், ஓபரினும் முதல் உயிர் பொருள்களின் பரிணாம வளர்ச்சிக்கு விளக்கம் அளிக்க முற்பட்டனர். சார்லஸ் டார்வினோ தற்கால உயிர் பொருள்களின் தோற்றத்தை விளக்க ஒரு கொள்கையை முன்மொழிந்தார். அவரது கொள்கை இயற்கையான தெரிந்துகொள்ளல் விதி என அறியப்படுகிறது. அது தகுதியுள்ளவற்றின் உயிர்பிழைப்பு எனவும் பொதுவாக சொல்லப்படுகிறது. அதிகபட்ச தகுதியோடு, எப்போதும் மாறுகின்ற சூழலுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளும் உயிர்களுக்கே இயற்கை சாதகமாயிருந்ததாகவும், சாதகமற்ற குணங்களை அது களைந்ததாகவும் டார்வின் கருதினார். பரிணாம வளர்ச்சியின் பல நிலைகளில் காணப்பட்டதாக கருதப்பட்ட உயிரினங்களின் புதைபடிவுகள் அவரது கருத்துக்களுக்கு ஆதார




| BELIEF | ATHEISTIC MATERIALISM | THEISTIC EVOLUTION | SPECIAL CREATION |
|---|---|---|---|
| Source | Accident arrangement of molecules first | God through evolution | God in six literal days |
| Time | One billion years ago | One billion years ago | Less than 10000 years |
| Method | Mutations | Mutations | Supernatural act from the hand of god |
| Purpose | No purpose | To glorify God | To glorify God |
| First man | Some remote sub- human male ape | Some remote sub-human male ape | Adam |
| First women | Some remote sub-human female ape | Some remote sub-human female ape | Eve |
| View of gen | Pure myth | Spiritual allegory | Historical fact |
| Proponent | Darwin and his followers | Those who would attempt to reconcile Moses and Darwin | Moses |
| *Reason for view* | *Contempt for supernatural possibility* | *Mistaken view that evolution has been proven and must be accepted* | *Literal interpretation of genesis 1;2* |
| Problem | First law of thermodynamics; second law of thermodynamics; law of biogenesis | Cannot take at face value (gen. 1-2; rom. 4:12-21) | No real problem |
| Scriptural proof | None | None | Gen.1:31;2:1-3;Ex.20:11;31:17;Ps.33:6-9;1 Cor.11:8-sc9;15:39;1 Tim.2:13 |
| Scientific Support | None | None | First law of thermodynamics; second law of thermodynamics; law of biogenesis |

மாக நிறுத்தப்பட்டன. ஆனால், டார்வினின் கொள்கை முற்றிலும் குறைவுள்ளதாக இருந்தது. ஏனென்றால், அவரது காலத்தில் மரபியலைக் (genetics) குறித்த அறிவு யாருக்கும் இருக்கவில்லை.

முதலாவதாக, அகழ்வாராய்ச்சியாளர்களாலும், புதைபடிவு ஆராய்ச்சியாளார்களாலும் கண்டெடுக்கப்பட்ட மனித புதைபடிவுகள் பெறும்பாலும் முற்றுபெறாதவை. தோராயமாக, 10 முதல் 12 சதவீத பாகங்களே அவர்களுக்கு கிடைத்தன. ஆக, மீதமுள்ள உடற்கூற்றை ஆளாளுக்குத் தோன்றிய விதத்தில் ஊகித்து அமைத்தனர். மேலும், ஏ.ஈ. வில்டர் ஸ்மித், The Scientific Alternative to Neo-Darwinian Evolutionary Theory என்ற தனது புத்தகத்தில் பரிணாம வளர்ச்சியின் முட்டாள்தனத்தை, ஒவ்வொரு உயிர்பொருளைப் பற்றிய குறியீட்டுத் தகவல் (encoded information) அதின் இனக்கீற்று அமிலத்தில் (DNA) சேமிக்கப்பட்டுள்ளது என்ற ஒரு மகத்தான உண்மையின் மூலம் நிரூபிக்கிறார். இந்த குறியீட்டுத் தகவல் ஒவ்வொரு உயிர் பொருளுக்கும் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. ஓர் உயிரணுப் பொருளானது மனிதனாக மாறினது என்றால், மனிதனை செயல்பட வைக்கும் அத்தனை மரபியல் தகவல்களும் அந்த மூல அணுக்குள் இருந்திருக்க வேண்டும். ஆனால், ஒரு செல் அமீபாவில் அண்டசராசரத்திலும் உள்ள அனைத்து உயிர்களையும் செயல்பட செய்யும் குறியீட்டுத் தகவல்களும் காணப்படவில்லை என்று நாம் அறிந்திருக்கிறோம்! அது அந்த மூல அணுவில் காணப்படவில்லை என்றால், அது எங்கிருந்து வந்தது? சிருஷ்டி கர்த்தாவிடமிருந்து தான் என்பதில் ஐயமில்லை. ஆக, ஆறு நாள் சிருஷ்டிப்புக்கு முரணாகக் கூற அறிவியலிடம் ஏதும் இல்லை. அப்படியானால், இந்த பரிணாம வளர்ச்சியாளர்களின் விருப்பம் தான் என்ன? பரிணாம வளர்ச்சி என்னும் அறிவியலின் ஆதிக்கவாத விதி உண்மைக்கு புறம்பானது; அது விஞ்ஞானமல்ல; அது நியாயமற்றது; அது சாத்தியமற்றது; அது அறிவிற்கு ஏற்புடையது அல்ல. பரிணாம வளர்ச்சி என்பது அறிவியல் உண்மையென அறிந்திருக்கும் அனைத்தையும் மீறுவதாக உள்ளது. பரிணாம வளர்ச்சி என்பது ஒரு போலி சமயம். அந்த போலி சமயத்தின் கொள்கைகளாக கருதப்படுபவையாவன: முதலாவது, பரிணாம வளர்ச்சி ஒரு கலப்படமற்ற விஞ்ஞானம்; அது கடவுள் என்ற மாயையின் மேல் அல்ல, மெய்மையின் மேல் கட்டப்பட்ட ஒரு மாற்றக்கூடா அமைப்பு. இரண்டாவது, அது அறிவுக்கு சமம்; ஏனெனில் அதில் அறிவிற்கு அப்பாற்பட்ட அற்புதங்களுக்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊடுருவல்களுக்கும் இடம் இல்லை. மூன்றவதாக, பரிணாம வளர்ச்சி விடுதலை அளிப்பது; ஏனெனில் அதில் கடவுளுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் இடம் இல்லை. நான்காவதாக, பரிணாம வளர்ச்சி ஜனநாயகமானது; ஏனெனில் ஒவ்வொருவரும் தனது நீதிக்குரிய தீர்வுகளுக்கு காரணகர்த்தாவாக இருக்கக் கூடும். ஐந்தாவதாக, பரிணாம வளர்ச்சி விசாலமானது; ஏனெனில் அது வேதாகமத்தின் கடவுளைத் தள்ளி, தனக்குப் பிடித்த யாரையும், எதையும் கடவுளாக்க சுதந்திரமளிக்கிறது. மெய்சிலிர்க்க வைக்கிறதல்லவா? நித்திய நீதிபதிக்கு கணக்கு கொடுப்பதைத் தவிர்க்கவே இவர்கள் பகுத்தறிவை எதிர்த்து, மடமையை தழுவுகின்றனர். வேதாகமத்தின் கடவுளைக் கொலை செய்யவே, பரிணாம வளர்ச்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீதிபதியைத் தீர்த்துக்கட்டிவிட்டு, மக்கள் குற்றவுணர்வோ, பின்விளைவுகளோயின்றி, தமது விருப்பங்களை நிறைவேற்ற சுதந்திரமளிக்கவே பரிணாம வளர்ச்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, என்கிறார் ஜான் மெக்ஆர்த்தர்.

ஆதியாகமத்தில் கூறப்பட்டுள்ள ஆரம்பங்களைப் புரிந்துகொள்ளுவது நம் அனைவருக்கும் இன்றியமையாதது. ஏனெனில் அதுவே வேதாகமத்தின் ஏனைய பகுதிகளுக்கு அடிப்படையாக உள்ளது. ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்கள் உண்மையைக் கூறவில்லை என்றால், ஏன் நாம் அந்த வேதாகமத்தில் கூறப்பட்ட எதையும் நம்ப வேண்டும்? ஆதியாகமாம் கூறும் ஆரம்பத்தை நம்மால் நம்ப முடியவில்லை என்றால், நமது வாழ்விற்கான நோக்கத்தையும், முடிவுநிலையையும் இழந்து விட்டோம் என்றே அர்த்தம்! எப்படியென்றால், உலகம் சிருஷ்டிக்கப்பட்டது முதலே அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் ஆகிய காணக்கூடாத இயல்புகள், அவர் படைத்தவற்றின் மூலம் தெளிவாய்க் காணப்படுகின்றன; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலும் தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காராரானார்கள். ரோமர் 1:20-22

– செல்வி. கிறிஸ்டினா சூசன்,
உயிரியலில் முதுகலை மாணவி




## A Hidden Message
## "The Gospel" in Genesis

We frequently use the familiar term, gospel, or good news.
Where is the first place it appears in the Bible?
The answer may surprise to you.
A remarkable example of this can be glimpsed in Genesis Chapter 5, where we have the genealogy of Adam through Noah. This is one of those chapters which we often tend to skim over quickly as we pass through Genesis it's simply a genealogy from Adam to Noah.
In our Bible, we read the Hebrew names.
What do these names mean in English?
The Composite List: Now let's put it all together:

| Hebrew | English |
|---|---|
| Adam | Man |
| Seth | Appointed |
| Enosh | Mortal |
| Kenan | Sorrow; |
| Mahalalel | The Blessed God |
| Jared | Shall come down |
| Enoch | Teaching |
| Methuselah | His death shall bring |
| Lamech | The Despairing |
| Noah | Rest, or comfort |

That's rather remarkable:
Man (is) appointed mortal sorrow; (but) the Blessed God shall come down teaching (that) His death shall bring (the) despairing rest.
Here's the Gospel hidden within a genealogy in Genesis!

## METHUSELAH:

Enoch was the father of Methuselah, who we have already mentioned. Enoch walked with God after he begat Methuselah. (Genesis 5:21, 24) Apparently, Enoch received the prophecy of the Great Flood, and was told that as long as his son was alive, the judgment of the flood would be withheld. The year that Methuselah died, the flood came. Methuselah can be the oldest man in the Bible, yet he died before his father!

## THE 3 HEAVEN OF CREATION (GEN 1:1-2:1)




**Comparisons between the themes of the first 11 chapters of Genesis and the last 10 chapters of the book of Revelation**

| GENESIS | GENESIS | REVELATION | REVELATION |
|---|---|---|---|
| The creation of heaven and earth | 1:1-2:4a | The creation of the new heaven and earth | 21:1-5 |
| The Eden Sanctuary, the river that flowed out of Eden, and the Tree of Life | 2:4b-17 | The Sanctuary of the New Jerusalem, the river that flowed from the New Jerusalem, and the Tree of Life | 21:9-22:2 |
| The bridegroom (Adam), the bride (Eve) and the wedding of Adam and Eve | 2:18-25 | The Bride = the Church, and her Bridegroom = Christ; the wedding of the Lamb | 19:5-9; 21:1-9 |
| Satan and the woman, Eve | 3:1-13 | Satan and "the Woman," the "new Eve" | 12:1-17 |
| The curse | 3:14-19 | The curse is abolished | 22:3 |
| Death enters creation | 3:19 | Death is destroyed | 20:14-15 |
| Babylon built; judgment on the nations | 10:10; 11:1-4 | Babylon destroyed; judgment on the nations | 14:6-20 |
| The Redeemer is promised | 3:15 | The victorious Redeemer reigns | 20:1-6; 21:22-27; 22:3-5 |

# காயீன் & ஆபேலின் காணிக்கை



ஆதியாகமம் 4:3 முதல் 5 வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள காயீன் ஆபேல் செலுத்திய காணிக்கையைக் குறித்து தியானிப்போம்.சில நாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான்.ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றை கொண்டு வந்தான். ஆபேலையும், அவன் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கீகரித்தார்.காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. ஆதியாகமம் 4:3-5.

**முதன்மையான, முழுமையான காணிக்கை:**

இரண்டு பேரும் ஒரே வீட்டுப் பிள்ளைகாக இருந்தாலும், தேவனுக்கு காணிக்கை செலுத்தும்போது, ஆபேல் முழு மனதுடன் முதன்மையானதைச் செலுத்தினான். காயீனோ முழு மனதுடனோ, முதன்மையானதையோ செலுத்தவில்லை. உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு (நீதி 3:9) என்ற வசனத்தின்படி, ஆபேல் கர்த்தரை கனம் பண்ணினான்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்(மத் 6:33) என்ற வசனத்தின்படி மற்றும் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு



மனதோடும், உன் முழுப் பெலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை (மாற்கு 12:30) என்ற வசனத்தின்படி, நாம் நமது வாழ்வில் முதல் இடத்தை தேவனுக்கே கொடுக்க வேண்டும். மாத்திரமல்ல முழுமையாக அவரிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். உலக நண்பர்களிடத்திலும் அதிகளவு அன்பு வைத்துக் கொண்டு, தேவனையும் பிரியப்படுத்துவது கூடாத காரியம். நமக்காக தமது ஜீவனையே கொடுத்த தேவன், முழுமையான அன்பை நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார். முழுமையான அன்பை தேவனுக்குக் செலுத்த ஆயத்தமா?

**விசுவாசத்துடன் கூடிய காணிக்கை:**

விசுவாசப்பட்டியலில் முதலாவதாக இடம் பெற்றவர். நீதிமான் (எபிரெயர் 11:4), முதலாவது மேய்ப்பன் (ஆதி 4:2), முதல் இரத்தசாட்சி (மத் 23:35) என்ற சிறப்பம்சங்களுக்குச் சொந்தகாரர் ஆபேல். எபி 11:4ன்படி விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்.

காற்றடித்தாலும், புயல்வந்தாலும், தண்ணீர்கள், ஆறுகள், அக்கினி, அக்கினிஜீவாலைப் போன்ற பிரச்சினைகள் வந்தாலும் தேவன் நம்மோடுதான் இருக்கிறார் (ஏசாயா 43:2). நமது வாழ்வின் சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், தேவன் மீது விசுவாசம் வைத்தவர்களாக முன்னேறிச் செல்லுவோம். ஆபேலையும், அவன் காணிக்கையையும் அங்கீகரித்த தேவன் நம்மையும் அங்கீகரிப்பார்.

**நன்மை, மேன்மையான, உற்சாகமான காணிக்கை:**

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. யாக் 1:17, எபி 11:4ன் படி ஆபேல் தேவனுக்கு மேன்மையான பலிகளைச் செலுத்தினான். மந்தையின் தலையீற்றுகள், கொழுமையானவைகளை தேவனுக்கு உற்சாகமாக செலுத்தினான். ஆதி 4:7ன்படி ஆபேல் நன்மையானதை தேவனுக்குச் செலுத்தினான். காயீனோ நன்மையானதைச் செலுத்த தவறி விட்டான். காணிக்கையை விட, காணிக்கை கொடுப்பவர்தான் முக்கியம் தீமை/பாவம் செய்து தேவனுக்கு காணிக்கை செலுத்தினால், தேவன் அங்கீகரிக்கவும் மாட்டார். நம்மை மேன்மைப்படுத்தவும் மாட்டார்.

நம் வாழ்வில் நமக்கு கிடைத்த அனைத்து நன்மைகள், ஆசீர்வாதங்களும் தேவனுடையது. தேவனிடத்திலிருந்தே நாம் பெற்றுள்ளோம். உற்சாகமும், சந்தோஷத்துடன் கூடிய இருதயத்துடன் தேவனுக்கும், பிறருக்கும் நாம் கொடுக்க வேண்டும்,நம்முடையது/என்னுடையது என்று பெருமை பாராட்ட ஒன்றுமில்லை. நமது நேரம், பணம், உடமைகள், தாலந்துகள் என அனைத்திலும் சிறந்ததை நம் தேவனுக்கு சந்தோஷத்துடன் கொடுக்க தீர்மானிப்போமா?

**காயீனின் எரிச்சல், பொறாமை குணம் - கொலையில் முடிந்தது.**

காயீனின் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்படாததால், அவனுடைய முகநாடி வேறுபட்டு, எரிச்சல் அடைந்தான் என வாசிக்கிறோம் (ஆதி 4: 5-7). மாறாக, தனது சகோதரன்மீது பொறாமை கொண்டான். எரிச்சலடைந்தான். முகநாடி வேறுபட்டது. தேவனிடமே கேள்வி கேட்குமளவு துணிகரம், இறுதியில் கொலைகாரனாக மாறி விட்டான். பாவ உணர்வின்றி, தீங்குக்கு மனஸ்தாபப்படாமல் இருந்து விட்டான்.நமது தவறையும் பிறர் சுட்டிக்காட்டும் போது, கோபப்படாமல், அதனைச்சரி செய்து கொள்ள வேண்டும். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். 1 கொரி 11:31 ன்படி, அடிக்கடி நம்மை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

பாவம் நம்மை ஆளாதிருக்கச் செய்ய நமது சுய பெலத்தால் முடியாது, தேவனிடத்திற்குத் திரும்பி விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டு, விசுவாச நண்பர்களுடன் ஐக்கியம் கொள்ளும் போது, பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாய் நமக்கு உதவி செய்வார். பாவத்திற்கு மரித்து, நீதிக்கு / நன்மைக்கு பிழைத்திருக்கும் வாழ்க்கை வாழ வேண்டும் (ரோமர் 6:11). ரோமர் 6:12ன்படி. நம் சரீர இச்சைகளுக்கு / அற்ப சந்தோஷங்களுக்கு (மொபைல், சீரியல் பார்ப்பது, உலகபிரகாரமான நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது) இடம் கொடுக்காமல், பாவம் நம்மை ஆளாதபடி, காத்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

மாம்சம் ஆவிக்கும், ஆவி மாம்சத்திற்கும் எதிராக போராடுவது. கிறிஸ்துவை முகமுகமாய் சந்திக்கும் நாள்வரை, நாம் சந்திக்கக்கூடிய போராட்டம். பாவ செயல்களுக்குக் கீழ்ப்படிந்தால், பாவத்திற்கு அடிமையாகி விடுவோம். சிறு பாவமாயிருந்தாலும், அதற்கு அடிமைப்பட்டுவிட்டால், அது வளர்ந்து (யாக் 1:14,15, ரோமர் 6:21-23). பேராபத்திற்குள் நம்மை கொண்டு போய் நிறுத்திவிடும்.

தேவன் நம்மை சரிப்படுத்த, அவரோடுள்ள ஐக்கியத்தை மீண்டும் உயிர்ப்பிக்க விரும்புகிறார். ஆகவே தேவன் நம்மை சிட்சிக்கும் போது, சரிசெய்யும் போது அசட்டை செய்யாமல் அவரோடுள்ள ஐக்கியத்தை புதுப்பித்துக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போமா?

நமது வாழ்விற்கான தேவ ஆலோசனைகளும், நெறிமுறைகளும் வேதாகமத்தில் நிறைந்துள்ளன. தேவனுக்கு பிரியமான நேர்வழியில் செல்ல வேதம் நமக்கு வழிகாட்டுகிறது. ஆபேலைப்போல நாமும் தேவனையே மேன்மைப்படுத்த, தேவனுக்கு உகந்த காரியங்களைச் செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போம். வேதத்தை நேசிப்போம். வேதம் காட்டும் வழியில் நடப்போம்.

- Mrs.Latha Isaac



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தென்காசி மாவட்டம்
வாலிபர் & இளம் வாலிபர் முகாம்
நாள்:
ஜனவரி 2020
15 காலை 10 மணி முதல்
17 மதியம் 2 மணி வரை
இடம்:
பிலிவர்ஸ் சர்ச் கேம்பஸ்
குற்றாலம்
தலைமை:
Rev.ஜெபரத்தினம்
குருவானவர் தென்காசி சேகரம்
தேவ செய்தி:
Rev.சுதர்சன் தாமஸ் - GS FMPB
Dr.கிதியோன் கணேஷ் - Chennai
Bro.ஐசக் கமலேஷ் - Chennai
Bro.செல்வின் - FMPB youth & Teens wing
Sis.மெர்சி செல்வின் - FMPB
ஆளப்பிறந்தவன்
"ராஜாவின் குமாரன் ராஜாவாக" 2 நாளா 23:3
பதிவு கட்டணம் : 100 /-
வாலிபர் மற்றும் இளம் வாலிபர் கூடுகை தனியாக நடைபெறும்
வயது வரம்பு:
13 முதல் 30 வரை
மேலும் தொடர்புக்கு
ஆலங்குளம் - 9442769813
தென்காசி - 9423403071,
கடையம் - 9442240300
அம்பை - 9486409306 ,
பாவூர்சத்திரம் - 9894726460
வாலிபர் பிரிவு - 9442572765
BORN to REIGN




FMPB
YOUTH & TEENS WING
fmpb youth wing
WE WISH YOU A
Happy
2020
NEW YEAR




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
சென்னை வாலிபர் பிரிவு நடத்தும்
வாலிபர் முகாம்
வயது வரம்பு
17 முதல் 25 வரை
LIFE WORTHY 3 DAYS
நாள் 2020 ஜனவரி 15 புதன் காலை 9 மணி
முதல் 17 வெள்ளி மதியம் 1 மணி வரை
இடம் சேக்ரட் ஹார்ட் பள்ளி வளாகம்
சோழிங்கநல்லூர், சென்னை
செய்தி சகோ. சுதர்சன் தாமஸ் (G.S.,FMPB)
சகோ. அசோக் வேதநாயகம் (Chennai)
சகோ. இம்மானுவேல் ரத்சித்சிங் (FMPB)
சகோ. துரை ஜாஸ்பர் (C.M.C,Vellore)
சகோ. சாம் டேனியல் (Chennai)
அசாம் மற்றும் ஜார்கண்ட் வாலிபர்கள்
1 சாமுவேல் 9, 10 படித்து வரவும்
தட்டு, டம்ளர், போர்வை கொண்டு வரவும்
பதிவு கட்டணம் ரூ. 100/-
MISSION SONGS WORSHIP SKITS GDs MESSAGES
தரித்து நில்
1 சாமுவேல் 9:27
தொடர்புக்கு
9841032224, 9445119769, 9444396215, 9789917882, 9096057196, 9445200041